உ

[illegible]

[illegible]

ஓம்.

வந்தேமாதரம்

தமிழ்நாட்டு தேசபக்தர்

சிதம்பரம்.

ஸ்ரீமான் நா. தெண்டபாணிபிள்ளை அவர்கள்

திவ்விய சரித்திரம்.

இஃது

தஞ்சை ஜில்லா காங்கிரஸ்கமிட்டி அக்கிராசனர்

கார்குழ. பண்ணை

ஸ்ரீமான் வெ. சின்னையாபிள்ளை அவர்களால்

எழுதப்பெற்றது

சிதம்பரம் தேசீயமஹாசபையின் காரியதரிசி

ஸ்ரீமான் தெ. தயிலியப்பபிள்ளையால்

வெளியிடப்பட்டு

சிதம்பரம்,

சண்முகசுந்தரவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1932. [அணா-4.

முதல்பதிப்பு காப்பிகள் 1000

முகவுரை.

ஆன்மசக்தி நிறைந்த இந்தியநாட்டிற் பிறந்த, தேசாபிமானிகளிற் சிறந்த ஒருவருடைய ஜீவிய சரித்திரத்திற்கு முகவுரை யென்றொன்று எழுதுவது முற்றிலும் அவசியமின்றாயினும், அன்னவர் பாற்பொங்கி யெழுந்த அளவுகடந்த அன்பின் பெருக்கால் சண்டு சிலவரிகள் எழுத [illegible] யிற்று. தொன்று தொட்டு ஜீவர்கள் காம[illegible], தனத்தையோ, [illegible] சிக்கப்படுகின்றார்கள் [illegible] வித்து வருகிறார்கள் [illegible] மண், பொன், பெண், இவைகளில் வைத்திருக்கும், விடமுடியாத பற்று அவசிய பிரியத்தினாலேயே சகலசாஸ்திரங்களிலும், ஆபதன் ஞானி, தீரன், முக்தன், பெரியோன், என்னும் பதங்களுக்கு [illegible] சந்தர்ப்பங்களிலிருக்கும் விடுபட்டவனே அல்லது அவைகளிடம் வைத்த பிரியத்தைத் துறந்தவன் என்பது தான் பொருள். அவ்வாறு அவைகளின் கண் வைத்த பிரியத்தை நிரோதிக்க வேண்டுமாயின், அதற்கொரு [illegible] ஜீவனத்திற்கு மற்றொரு பொருள் அல்லது விஷயத்தினிடத்து ஆசையிருத்தல் வேண்டும். அங்ஙனமாயின் அத்தகைய பொருள் அல்லது விஷயமாய தன்னிடமே [illegible] ஒத்தனவாயிருத்தல் பொருந்தாது. அம்மட்டோ [illegible].

[illegible] ஆண்டபாணியும், தனது பிரியத்தை [illegible], அரிய குழந்தை, பெரியகுடும்பம், இவைகளின்மேல் [illegible] நிரோதித்து பாரதபூமியின் [illegible] கருதித் தமிழுலகம் அனைத்தும் [illegible] தெரியப்படுத்த அல்லவா [illegible] செய்தி திருப்பூரும் "ஸ்ரீ [illegible]" [illegible] என்பதைத் தமிழுலகம் [illegible].

தஞ்சை } [illegible]
வடக்கு [illegible] } [illegible]

இந்தியமக்களின் துயரம்.

உடற்பொருளாவி மூன்றும் உலகினுக் கீந்தவெந்தாய்!
விடப்படா உரிமைவேண்டி விடுத்தக்கட்டுரைகட்காய்
இடர் பல ஏற்று நொந்தாய்! இரணியன் சேயைப்போல;
கடற்பெருங்கருணைவேந்தே! காந்தியே! சிறைபட்டாயோ!

ஆவினைப் பிரிந்தகன்றாய் அலறியே கலங்குகின்றோம்!
தாவினைக்காறு துன்பக்கடலினில் தவிக்கின்றோமே!
மேனினைச் சிறைக்குள் ஐயோ! மெய்யுடல் வருந்திநோவ!
பாவியருனைவிடுத்துப் பாழுடல் தரிக்கின்றோமே!

சாந்தமே உருவுகொண்டு சமைந்தது போலவந்த
காந்தியே! அன்பே! எங்கள் கருணையங்கடலே! நீவிர்
மாந்தரின் உரிமைநாடி மனமூர்ந்துழைத்தவாறே
எந்திரப்பணிகளேற்றி இருகிலும் போற்றவாழ்வோம்!

ஸ்ரீகாந்தியடிகளின் கட்டளை.

ஆரிய நாடு ஈன்ற அருந்தவ புதல்வீர்; கேண்மின்!
காரியசித்தி வேண்டில் கருமத்தைச் சாந்த
பாரினில் புரிந்து தீயப் பகை, வினை அகற்றி என்றும்.
சீரிய பாரத நாட்டின் சிறப்பினை வளர்த்து வாழ்மின்!

நாட்டினிற் சமைத்த ஆடை தனிப்பொருள் பேணி, மற்றெம்
மாட்டினுஞ் சிறந்ததேனும் மற்றவர் பணிக்க ஆடை
வீட்டினில் நாட்டிடின்றி வேயினில் எறிமின்! எங்கும்
சாட்டினம் பரவ ஓங்க, நாடொரும் முயற்சி கொண்மின்!

சத்திய நெறிகெடாமற் சாந்தநற் பணிகெடாமல்
பத்திரமாக நுங்கள் பாரத சபையைப் போற்றி
இந்தியாம் சுதந்தரத்தைச் சீக்கிரம் பெறவே நீங்கள்
பக்தியாய் பாரதத்தாய் பதமலர் இறைஞ்சுவீரே!

வந்தேமாதரம்.

உலகசிரேஷ்டர்,

மஹாத்மா காந்தி.

“ஒத்துழையாமையில் ஸ்வராஜ்யம்.”

சாந்தமயமெனவிளங்கும் தனிப்பொருளை
யுளத்தென்றும்
ஏத்திடுயிர் தமக்கெல்லா மினிமை செயவுல
கிடையே
போந்தருணமலையாகும் புனிதநிறைகடலாகும்
காந்தியடியிணைமலரைக் கருத்திருத்தி வழுத்
துவமே!

சென்னை. } திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார்;
19—3—22 } “நவசக்தி” பத்திராதிபர்.

நவசக்திபத்திராதிபர்,
ஸ்ரீலஸ்ரீ திரு. வி. கல்லியாணசுந்தரமுதலியார் அவர்கள்
நவசக்தியில் ஸ்ரீமான் நா. தண்டபாணிபிள்ளை அவர்கள்
சிறைசென்றது பற்றி தன்கருத்தை வெளியிட்டார்கள்.

"நவசக்தி."

ஸ்ரீமான் நா. தண்டபாணிபிள்ளை அவர்கள் சிறந்த தேசபக்தர்களோடு சிறைச்சாலையாகிய தவச்சாலையில் ஒன்றுவாழும்பேற்றைப்பெற்றுவிட்டார்கள். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் காந்தியின் கட்டளைப்படி ஒத்துழையாதருமத்தைக் கடைப்பிடித்துமன்றத்தில் எதிர்வாதம்புரியாது சிறை புகுந்தார்கள். இச்செய்தி தமிழ்நாட்டுக்குப் பெருமகிழ்ச்சி யூண்டாக்கும்.

ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையவர்கள் பி. ஏ. இளைஞர்; அவர்க்கு மனைவிமக்களிருக்கின்றார்கள். இவ்வயதுப்பருவத்தில் மனைவிமக்களை விடுத்துப் பொதுக்காரியங்களில் தலையிடுதலருமை. அதனினும் அருமை தேசசேவையில் தலைப்படுவது, அதனினும் அருமை ஒத்துழையாமையியக்கத்தில் சேர்வது; ஒத்துழையா இயக்கத்தில் சேர்வோர் எல்லா ஆசைகளையும் வெறுத்த துறவிகள் போன்றவர்களாயிருக்க வேண்டுமென்பதையீண்டு நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம். ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையவர்கள் இளம்பருவத்தில் தேசத்துக்கு உழைக்க மனைவிமக்களை விட்டிருக்கத்தாம் இசைந்தாரென்னுஞ்செய்தி தெரியப்பட்டது. அவரது தேசபக்தியை உறுதியைப் புலப்படுத்துகிறது. இவர்போன்ற இளைஞர்கள் வெளிப்போந்து பிரச்சாரஞ்செய்து சிறைபுகுவதே பாரத மாதாவிற்குப் பெருமகிழ்ச்சியினையூட்டுவதாகும்.

ஸ்ரீமான் தண்டபாணிப்பிள்ளையவர்கள் சுமார் ஐந்து வருடகாலமாக தேசசேவை செய்துகொண்டு வந்தார். அவர் தேசசேவையில் ஈடுபட்டகாலமுதல் சிறைபுகுந்த காலவரை காங்கிரஸ்கட்சியையே கடைப்பிடித்துவந்தார். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் உபந்நியாசம் பொதுஜனங்களின் உள்ளத்தைக் கவர்வதென்பது நேரில் அனுபவித்தவர்க்குத் தெரியும். அவருடைய பேச்சில் அலங்காரமும் ஆவேசமும் ததும்பிக்கொண்டிருக்கும். சாதாரண ஜனங்கள் உள்ளத்தில் கருத்துக்களைப் பசுமரத்தாணிபோல் பதியவைக்கும் ஆற்றல் தேசபக்தர் தண்டபாணிப்பிள்ளையவர்கள் பாலிருந்து விளங்குவதை கண்டு விரித்துகூறவேண்டுவதில்லை.

சென்னையில் ஸ்ரீமான் தண்டபாணிப்பிள்ளையவர்கள் வசிக்கும்போது தொழிலாளர் முன்னேற்றத்தை நாடித் தொண்டு செய்துவந்தார். தொழிலாளர் இயக்கம் தோன்றுவதற்கும், அதுவளர்ப்பெறுவதற்கும் காரணர்களாயிருந்தவருள் நண்பர் தண்டபாணிப்பிள்ளையுமொருவர். இளமைப்பருவமுடையபிள்ளையவர்களால் நம் தமிழ்நாட்டுக்கு விளைந்த நலன்கள் பலவுண்டு.

தமிழ்நாட்டில் தேசத்தொண்டு ஆற்றவேண்டிய கடமையை ஸ்ரீமான் பிள்ளையவர்கள் நல்லமுறையில் ஆற்றினார். இப்பொழுது பாரதமாதாவின் இன்புதல்வராக விளங்குகிறார். தண்டபாணிப்பிள்ளையவர்கள் ஸ்தூலவுடல் அதிகாரவர்க்கச்சிறையில் கட்டுப்படுத்தப்பட்டுக்கிடந்தாலும், சூட்சுமவுடல் தேசத்தொண்டைச் சூட்சுமமாகச்செய்து கொண்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

என்னருமை நண்ப! தண்டபாணி! இந்தியபாதுகாப்புச் சேனையில் சேர்ந்த வீர! கட்டபொம்மு, தண்டபாணியேபோல், வீரத்தன்மையோடு தேசசேவைசெய்தீர்; உமது இளம் பருவத்தை, அருமை மனைவியை, மைந்தரை, அன்னையை, சகோதரர்களை, மறந்து அவர்கள்மீதுகொண்ட பற்றை, ஆசையை, காதலை, அன்னைப்பாரத மாதாவின்மீது செலுத்திச் சிறைபுகுந்தீர்; நீர் புனிதரானீர்; உம்மைப்போல் ஆகிடுவோம்.

ஸ்ரீமான் தண்டபாணிப்பிள்ளையவர்கள் செல்வத்திற் சிறந்தவரல்லர். அவர் வறியவர். அவர் மனைவி மக்களைப் பாரத மாதாவின் வசம் ஒப்புவித்துவிட்டுச் சிறைபுகுந்தார். அவரைக் காக்கவேண்டியது தேசத்தார் கடமை. ஆகவே அவர் குடும்பத்துக்குச் சிறு உதவிசெய்யும். அவ்வுதவி போதாது. ஸ்ரீமான் தண்டபாணிப்பிள்ளையவர்கள் பால் பற்றுடைய தேசபக்தர்களும் மற்றவர்களும் அவர் குடும்பத்துக்குப் போதிய உதவிபுரிவார்களாக. ஸ்ரீ தண்டபாணிப்பிள்ளை அவர்களின் மனைவியார் விலாசம் வருமாறு:—

சென்னை,
துன்மதி௵
கார்த்திகை மீ ௨௳

ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மாள்,
ஸ்ரீ தண்டபாணிப்பிள்ளை மனைவியார்,
மேலக்காவேரி, கும்பகோணம்.

தமிழ்நாட்டிற்கு
ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை விடுத்தமுறையீடு
"நவசக்தி"
(அன்மதி, கார்த்திகை, உசஉ.)

எனதருமைத் தாய்த் திருநாடே!

நான் என்றைக்கு உன் திருவயிற்றிலிருந்து உதித்தேனோ அன்று முதல் என் உடைகத்தாய்! என்னைத் தாலாட்டி ஆங்காங்கு வளர்த்ததையும், உன் செந்தமிழினால் என்னைப் பாராட்டிச் சோறூட்டி வளர்த்தவர்களையும், உன் செந்தமிழினைக் காக்க நான் இவ்வுடலை நீத்து உன் பொற்பாதம் சேர்வேனானால் அதற்காக மனிதமக்கள் ஒப்பாரிவைத்து அழுவதையும், உன் தமிழினால், இதை அறியாத உன்மக்களிற் சில பொதுக்கூட்டங்களிலும், பத்திரிகைகளிடையிலும் அன்னிய பாஷையை உபயோகித்துவந்தார்கள். இதை அறிய [illegible] தமிழ் பேசப்படவேண்டுமென்று பல கூட்டங்களில் நான் கிளர்ச்சிசெய்து சிலரின் மனவருத்தத்திற்கும் ஆளாயிருக்கிறேன்.

"உன்னையிற் பின்னே உனக்கே அடைக்கலம்" என்று உன் திருவடி பணிகின்றேன். உன் முன்னேற்றத்தைப்பற்றி என் அறிக்கையையும், உன் புகழைப்பேசாத நாவும், உன் திருப்பணியைச் செய்யாத கரங்களும், இருந்தென்ன? பேசவேண்டுமன்? என் அம்மையே! உனது திருப்புகழ்ப்பட "போதாதாரேனும் பிறவா நாளே" யாதலால் எனக்கு பேசும் சக்தியை நீ எப்போது அளிக்கப்போகிறாய்? அன்னையே, "[illegible]" [illegible]

...க்தனாக எந்தனுக்கு நீ விடைதரவேண்டும். [illegible]
[illegible]
[illegible]
[illegible]
...ன் [illegible] இருந்தும் இன்னும் அவர்களுக்குத்
...ண்டாமையை ஒழிக்கும் சக்தியை [illegible]
[illegible] உன் திருவிளக்கில் [illegible]
...வரும் பலமதங்களிலும் பல ஜாதிகளிலும் [illegible]
[illegible]
[illegible] நீ அவர்களுக்குக்
...ரிக்கவில்லை? [illegible]
[illegible]
[illegible]
[illegible] சுதந்திரத்திற்காக [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] வேண்டும். [illegible]
[illegible] ஆசையைத் தீர
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்னிடம் அன்பு
...கொண்டவர்கள் [illegible] (உன்னை
[illegible] அன்பிருக்குமானால் தான் [illegible]
...மானால் சொன்னபடி கேட்டிருக்கவேண்டும்.) காங்கிரஸ்கட்

டளையின்படி டையவமைச்சினுல் அவர்களிட்டுப்பிரிந்து நான் சிறையிலிருக்கவே பிரியப்படுகிறேன். "கழுதைக்கும் ஆசை பிள்ளைக்கும் ஆசை" என்பதுபோல் உத்தியோகத்திலமர்ந்து கொண்டும், பள்ளியில் படித்துக்கொண்டும், பட்டத்தைக் கௌரவித்துக்கொண்டும், கள் சாராயத்தைக் குடித்துக்கொண் டும், வைசிராய் முதலியோருக்குச் சுற்றுமதுரம், அன்னிய ஆடையையிலக் காமுழும் உள்ள சில கனவான்கள் தேசபக்தியஞ் செய்து சிறைபுகுந்தோர்க்காகக்கூட்டங்கூட்டி வாய்ப் பேச்சினுல் அனுதாபங் காட்டுவதை நான் விரும்பவில்லை. உண்மை யாய், சிறைபுகுந்தோர் சொற்படி அநுஷ்டானத்தில் சுதேசியத்தைக் கடைப்பிடித்து, சுயராஜ்யத்தைச் சீக்கிர மடைந்து அதன் மூலமாயவர்களை விடுதலை செய்வாயாதேவி! உன்மக்களுக்கு நீ அருள் புரியாயா? நான்சிறைபுகுந்தால் என்னை சிறையில் வந்து பார்க்கவேண்டுமென்று நான் யாரையும் விரும்பவில்லை, என்னிடம் அன்புகொண்ட என் சகோதரர்கள் நான்விட்ட வேலையைப் பூர்த்திசெய்து சிறைக்குள் வந்தால் என்னைப்பார்க்கமுடியும், சிறைக்கு வெளியில் நின்று என்னைப்பார்க்க வருபவர்களை நான் பார்க்க மறுத்துவிடுவேனென்பதை முன்னாடியே தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜெயில் உணவும் ஜெயில் உடையும் கஷ்டமாயிருந்த போதிலும், சாதாரணமாகவே கடினமாக வேலை காவல் ஏற்பட்ட போதிலும் சந்தோஷமாக நான் அவைகளையே ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் கைக்காக என் சகோதரர்கள் உண்ணும் உணவையும் உடுக் கும் உடையையும் நான் தள்ளி, எனக்குமட்டும் பிரத்தி யேகமென்று நல்லுணவும் நல்லுடையும் கொள்ள நான் விரும்பவில்லை. சுதந்தரத்திற்காகச் சிறை போகிறேனென்

பொழுது காலாட்டியுண்டிருப்பதற்காகச் சிறை புகவில்லை என்பதை எனது சகோதரர்கள் உணர்வார்களாக. ஓ பாரத தேவி! உன் மக்களில் ஒருவராகிய, அன்றுஞ்டப் பிரமாணமுள்ள அகஸ்தியரென்பார் - தமிழையீன்ற தகைமையாளர் - முன்னொருகால் கைலாய மலையில் திருக்கலியாணம் நடக்கும்போது கூடின கூட்டத்தால் உன் கீழ் தலைகீழாய்த் தாழ்ந்துவிடுமென்றெண்ணி அதைச் சமப்படுத்தப் பொதிய மலையில் தங்கியிருந்தாரென்று புராணத்திற் கூறப்பட்டிருக்கிறது. அது உண்மையானால் இப்பொழுது உன் வடபாகத்தில் உள்ள மாகாணங்கள் எல்லாம் உண்மைத்தேசபக்தர்கள் சிறையிற் தங்கியிருக்கும் பாக்கியத்தைப்பெற்றிருப்பதால் வடநாட்டு தாழ்ந்து தென் நாடு (தமிழ்மாகாணம்) உயர்ந்திருப்பதை நீ உடனே சமன் செய்யவேண்டியல்ல தலைவர்கள் பலரை உற்பத்தி செய்யவேண்டும். அவர்கள் மூலம் நீ சுதந்தரம் பெற்று என்னையும் மடியிலிருந்து வெளியில் விளையாட விடவேணுமாய்த் திருவடியைப் பிரார்த்திக்கின்றேன். ஆயிரக்கணக்கான மேடைகளில் இலக்ஷக்கணக்கான உன் மக்களுக்கு மகாத்மா முதலானவர்கள் என்ன உபதேசித்தும் போதிய பலனேற்படாததைக் கண்டு அவர்களைப்பற்றி யுன்னிடம் முறையிட்டேன் என. சிறையில் என்னவனை செய்தாலும் மன்னிப்புகேட்பது மடமையாகுமென்பதை யுணர்ந்து என் உள்ளத்தை திடப்படுத்தி வைக்கிறது என்னை ஆசிர்வதிக்கும்படி உன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன். எந்தாய் வாழ்க. வந்தேமாதரம்.

தஞ்சாவூர் ஜெயில். } நா. தெண்டபாணிபிள்ளை.
2—12—1921. } தேசபக்தன்.

உ

வந்தேமாதரம்

அல்லாஹு அக்பர்! இந்துமுஸ்லிம்ஜே!

தேசபக்தன்

சிதம்பரம் ஸ்ரீமான் நா. தண்டபாணிபிள்ளையின் சரித்திரம்.

இளமைப்பருவம்.

அகிலபுவனங்களிலுமுள்ள ஆன்மாக்களை அவரவர் சஞ்சித, ஆகாமிய, பிராரத்வ கன்மாநுபவங்களுக்கேற்பத் தநுகரணபுவனபோகங்களைக் கொடுத்தருளுந்தனது பெருங் கருணையினால் தடுத்தாட்கொண்டு பேரின்பப்பெருவெளியிற் பிரியாதுபிணைவைக்கும் திருக்கூத்தனாகிய ஸ்ரீ நடராஜப்பெருமான் உறைவிடமாம் ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திரத்தின் கண்ணே மக்களின் ஜீவியத்தில் செய்யவேண்டியவைகளில் எவற்றைச்செய்யாத்தவறினும், மங்கைபங்கனை மனமொழி மெய்களால் வழிபாடியற்ற ஒருகாலுந்தவறாதவரும், குணக் குன்றென அனைவராலும் நன்குமதிக்கப்பட்டவரும், பிறர்

வருத்தம் காணச்சகியாத ஜீவகாருண்ய ஒழுக்கமுடையோரா ரும், உத்தமகுடும்பத்தைச் சேர்ந்தவரும் ஸ்ரீ சிதம்பரக்ஷேத் திரத்தின் அதிஷ்டதேவதையாகிய ஸ்ரீ தில்லையம்மன்கோவில் தேவஸ்தானத்தின் ஏகஸ்திபாத்தியத்தை வகித்துவந்த சான் றோர்களில் முதன்மைபெற்றவராகிய ஸ்ரீலஸ்ரீ சபாநாயகம் பிள்ளை என்பாரின் ஏகபுத்திரரும் சோழியசைவவே ளாள குலதிலகமாய்த்தோன்றியவருமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்து நாராயணசாமிப்பிள்ளையென்பாரும் அவர்தம் வாழ்க்கைத்து ணைவியாம் ஸ்ரீமதி தில்லைக்கண்ணம்மாள் என்பாரும் இயற் றிய பெருந்தவப்பெரும் பேற்றினாலும் ஸ்ரீமுருகப்பெரு மான் பாதசேவையில் இவ்விருவரும் ஈடுபடுத்தியபோதன் பின்பெருக்கினாலும், "இவரும் பாரததேவியின்பிள்ளையே" என அன்னையாரும் உரிமைப்பெயரிட்டழைத்தற்குரிய பெருமையைப்பெற்று விளங்கப்போகும் நம் அன்பரை அவருக்குத்தோன்ற அவதரிக்குங்காலம் பரிபக்குவமடைந்தி ருந்தது. அவ்வாறு சர்வஜித்து கார்த்திகைமீ ௩௨ புதன் சம் தோன்றியதம்மையு ஐயாட்டைப்பிராய மெய்தியதும், "தன்னையுணர்த்தாது கன்றியாவையுந்தான் முற்றியிருப்பா வன்" என்பதை உன்னுணர்த்தத்தக்கதாயார், (யாழ்ப்பாணம்) ஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலை யிற் சேர்ப்பித்து அத்தமிழ்ப்பள்ளிக்கிளைக்கு ஒருவாறு உண ரும் வண்ணஞ்செய்தது, பின் பச்சையப்பர் கலாசாலையில் ஆங் கிலமும் தமிழுமொருங்கே பயிலப்பெறுமாறு செய்தார். அம்மையும், தமக்குக்கற்பிக்குமாசிரியர்களின் மனமோகம் அம், தன்னுடன் கற்கும் சகபாடிகளின் மனம் இன்பு றும்படியாகவும், நீசேநீசேயன்பனிப்பின் அ (செட்டிகுளே வான்) வருப்பின் பரிட்சைக்குப் போகுங்காலவரையில், (அப் பருவத்திற்கு எஸ். எஸ். எல். ஸி. என்னும் பெயரிடப்பட் டது) தம்மவரின் கல்வியிலும் தன் இன்னுயிர்ந்தும் சிறந்

தது ஏழாவதில் திருத்தந்தையார் சர்வதாரி ஸு புரட் டாசி மீ 13உ வியாழக்கிழமை தவத்தில் அமரபக்ஷமகிய தமது 48-வது வயதின் முடிவில் இம்மண்ணுலகவாழ்வை நீத்து விண்ணுலகெய்தினர். தன் அருமைத்தந்தையைப் பி ரிந்த துக்கத்திலும், "நன்றாகப்பொருட்கல்விபோம்" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்கியும், ஆங்கிலக்கல்வியை அதிகம் கற்பதில் பலவொருபயனுமின்று என்பதை உணர்ந்ததி னாலும் தமக்குப்பிறந்த தாயாரையும், குஞ்சிதபாதம், சம்பந்தம் என்னும் தம்பிரண்டு இளையசகோதரர்களையும் தன்னுடையவீட்டியருப்பதைத்தாங்குங்கேடுதன்தலைமேலு சுமத்தியிருப்பதும், தண்டபாணியாம் முருகப்பிரான் அருள் கொண்டு அவதரித்ததினால் தண்டபாணியென்னும்பெயரி ந்திருநாமம் பெற்ற சிறந்த சகோதரர், கல்லாசாலைக்குப் போவதை நிறுத்தி இல்லத்தின் கண்ணேயே பயன்படத்தக்கல்வி கற்பித்து அறிவைப்பெருக்கிவந்தனர்.

இவரைப் பதினெட்டாவது வயது அடைந்ததும் பிச்செட் டியில் (போஸ்ட்மாஸ்டர்) இருந்துவந்தவரும் பெருந் தனவந்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ கலியாணசுந்தரமுதலி யார் என்பவர் தன்னுடைய பெண்ணாகிய ஸ்ரீமதி ருக்மணியம் மாளை இவ்விளங்குமாரனுக்கு விவாகஞ் செய்வித்துச்சென் னைக்கழைத்துப்போய், (M. S. M.) ரயில்வே ஆடிட் ஆபீஸில் ஒருகணிதபரிசோதக உத்தியோகத்திலேயமர்த்தினர். சில காலங்கள் வரை தமது அருமைத்தண்டபாணியும், தனது உத்தியோக முறையில் யாதொருவழுவுதலுமின்றி சௌக் கியகாலத்தில் வசித்து இன்புறுஞ்சமயத்து, "இன்பங்க ளென்னும் பயிர்களுக்கிடையில் துன்பங்களென்னுங்களை கள் தோன்றிக்கொண்டிருக்கின்றமையினாலேயே மனிதன் உலகில் உயர்ந்த அனுபவத்தையடைகிறான்" என்னும்

இளமைப்பருவம்.

அநுபவவாக்கியத்திற்கிலக்காக, நமது தண்டபாணியும்
டலியல் ஞானம், நிறைந்த வினர்க்கும் நர் அநுபவவாசக
று" என்று பிற்காலத்தவரால் புகழ்ந்தோதிய நிலையை
டைவதற்கு அவசியம் அடைந்தே தீரவேண்டிய நெறிகளை
க்களுக்கும், எம் தண்டபாணியின் ஜீவியகாரியாரம்பகா
லத்தில் தோன்றி நிற்கு மனத்தையடைத்து மறைந்தன.
த்தலைய நண்பர்களுள் மறந்தக்கரியதாகவே, நமது
பாணி தன் உயிர்க்காதலியையும், தனது மாமனாரையும்
னது ஒரே தங்கையாகிய சிவகாமசுந்தரியையும் சிவ
சாயுஜ்யவருவத்திற்குள் இருக்கவேண்டி நேரிட்டதுமேல்
னிலைமையும் மற்றவையையுங்குறித்த நமதுசகோதரர் தண்டபா
ணி நேர்ந்து அன்றிருந்து, சிறுவன்தானக்கப்பற்று நந்த
க்கொண்டாய், சென்னை ஸ்ரீமத் ஸ்ரீனிவாசபகவத்சுவாமிகளி
டத்தும் ஸ்ரீமத் சுப்பரத்னசிவப்பிரகாசசுவாமிகளிடத்தும்
விளக்கும் சுவாமிகளிடத்தும், பக்தி, யோகம், ஞானம்
முதலியவைகளினெறியைத்தெரியவேண்டி வைதீகமாகவே
க்கலைச்சிரவணஞ்செய்து வந்தார். அங்ஙனஞ்செய்துவ
ளே மதத்தைக்குறித்தும், மதத்தின் தெய்வத்தைக்குறித்த
ம் மதத்தின் பிரிவுகள், அத்தாட்சசாதனங்களையும் உபாய
ங்களையும் குறித்தும், அன்பேர்களின் அவையின்கண்
ப்புதைப்பேரம் இத்தலைக்கும் அடைந்தார்.

௨. புறமத கண்டனமும் பொதுஜனநன்மையும்.

ஆன்றோர்களாகிய மகரிஷிகளின் அற்புதசக்தியால் ஆரோகணித்த அருமறைகளின், அதிர்ச்சியின் பிரதித்தொனிகளால் புனிதமாக்கப்பட்ட, புனிதமாக்கப்படுகிற, புனிதமாக்கப்படப்போகிற இத்தியநாட்டிற்பிறந்த மதவாராய்ச்சியில்லாத சிலபாமரஜனசகோதரர்களை கிறிஸ்துமதத்திற் சேர்ப்பதற்காகதன்னாட்டவரிடம் பெரும்பொருள்களை ஊதியமாகப்பெற்று, இந்தியாவில் வந்து ஆங்காங்கே நிலயங்கள் ஏற்படுத்தியேசுமதத்தைப்பரவச்செய்யும் பிரசாரகூட்டங்களில் ஒன்றாகிய இரக்ஷணியசேனையைச்சேர்ந்த சில ஆங்கிலேயர்களும் கிருஸ்துவர்களும் சென்னையில் (பிராட்வே) என்னும் பெரியபாதையும் சைனாபஜார் என்னும் வீதியும் சந்திக்கும் இடமாகிய சட்டகலாசாலைக்கு முன்னர், ஞாயிற்றுக்கிழமைகளின் மாலை நேரங்களில், அபசுரசங்கீதசாகித்தியத்தால் கூட்டங்களைக்கூட்டி கல்வியறிவில்லாத பிரசங்கம்புரிவது வழக்கமாயிருந்தது. இதைக்கண்ணுற்ற நமது ஸ்ரீதண்டபாணியும் தமது இன்மொழிகளால் மற்றொருபிரசங்கமேடை யதேவிடத்தில் அமைத்து பிரசங்கம்புரிய, அதைக்கேட்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவண் அணுக, தாங்கள்பிரசங்கம்புரிந்தவிடம் காலியாகிவிட்டபடியால் இரக்ஷண்யசேனையார் வெட்கித்தமதிடம் சென்றனர். அன்று நமதுபிள்ளையின் பிரசங்கத்தைக்கேட்டவரனைவரும் இவ்வாறேபிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இவண் வந்துபிரசங்கம்புரிதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்கி நமது பிள்ளையும் பிரதி ஞாயிறுதோறும் ஆங்குசென்று இந்து மதத்தின் அருமையையும் புறமதத்தின் போலி நியாயத்தையும் எடுத்து அனைவருக்கும் பிரசங்கித்துவரவே இரக்ஷணியசேனையார் இங்குவந்து பிரசங்கிக்கும் வழக்கத்தையறவேவிட்டொழித்தனர். நமது பிள்ளையும் சிலஞாயிற்றின் பின்னர் ஹைகோர்ட்டுக்கு எதி

சிதுள்ள கடற்கரையின் கண்மேலே பிரசங்கத்தினால் பொது ஜனங்களுக்கு நல்லறிவூட்டி வந்தார். அன்றும் தொட்டு நாளது வரை, இரக்ஷண்ய சேனையாரின் இந்து மதத் தூஷணைப் பிரசங்கமானது சட்டகலாசாலைக்குமுன் நடக்காது ஒழிந்ததானது நமது ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையின் பெருமுயற்சியின் பயனும் போலீஸாரின் அடக்குமுறையினாலுமே யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நிகழ்ந்து வருமிடையில் நமது பிள்ளையும் மதவிஷயத்திலிருந்து மெல்ல ஆசார சீர்திருத்த விஷயமாக ஆண்டர்சன் ஹாலில் அநேக அருமையான பிரசங்கங்கள் செய்து வந்தார்.

இவரது பேசுந்திறனையும் தர்க்கமுறைதனையும், அவ்வப்பொழுது அக்கிராசனம் வகித்துவந்த ஸ்ரீமான்களான Sir C. சங்கரன்நாயர், S. ஸ்ரீனிவாசய்யங்கார், Sir T. சதாசிவய்யர் T. V. சேஷகிரி அய்யர் முதலானோர் வெகுவாகச் சிலாகித்துப் பேசியிருக்கின்றனர். ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமான இருவருஷத்திற்குப் பிறகு அதாவது 1915ம் வருஷம் கும்பகோணத்தில் வசித்துவரும் தற்குடிப்பட்டதைச் சேர்ந்த ஒரு ஸ்டேஷன்மாஸ்டர் ஸ்ரீலஸ்ரீ M. S. வில்வலிங்கம் செட்டியார், தமது பெண்ணை ஸ்ரீ தண்டபாணி பிள்ளைக்கு வாழ்க்கைத் துணைவியாக பாணிக்கிரஹணஞ் செய்து வைத்தார். அப்பெண்மணிதான் தற்சமயம் கும்பகோணத்தில் வசித்து வருகிற ஸ்ரீமதி கமலாம்பாள் சிலநாள்களுக்குள் ஸ்ரீ தண்டபாணிபிள்ளையும் தம்மனைவியையாமனுர் வீட்டிலேயே விட்டுச் சமூகவூழியத்தில் இறங்கினார் யுத்தத்தில் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சைசெய்ய வேண்டி ஏற்படுத்திய டாக்டர் ப. ராமனின் ஆம்புலன்ஸ் படையில் சேர்ந்து (First aid, Home Hygiene, Home Nursing & Sanitation, advance in first aid, Medalian in first aid,) முதலிய அநேகவிஷயங்களில் தேர்ச்சிபெற்று

படையின் வான்வளர்ப்போல், கார்ப்போல், என்ற பட்ட ங்களையும் பெற்றார். டாக்டர் நாயருடன் சென்னை ஆஸ்பத் திரிக்கப்பலில் பஸ்ராவிலிருந்து வந்தகாயப்பட்டயுத்தவீரர் களுக்குச் சிகிச்சை உதவிசெய்துவந்தார். இதற்காகச் சென் னைகவர்னராயிருந்த லார்டு பென்ட்லண்டு ஸ்ரீமின்னேயின் உதவியை அங்கீகரித்து அதற்காகமெச்சி ஒருகடிதம் எழு தினார். சென்னையில் மாயசுரமும், வாந்திபேதியும் வந்து நூற்றுக்கணக்கான ஜனங்களைக்கொள்ளைகொண்டபோது அனேக தொண்டர்களை அழைத்துக்கொண்டு ஒவ்வொருவீ ட்டிற்கும்போய் உதவிசெய்து மேற்படி நோய்களைத்தடுக்க ஆதாரமான பிரசங்கங்கள் செய்து துண்டுப்பிரசுரங்களும் வழங்கினார். மெஸபடோமியாவில் யுத்தமும் ரோகத்தின் பய ங்கரமேற்பட்டதினால் அதைத்தவிர்க்க ஸ்ரீமான் மின்னேயவர்களுக்கு பஸ்ராவிற்குப்போகப்பாஸும் உத்திரவும் மேஜர் ஹில்ஸ்டனிடமிருந்து வந்தது. தமது பிள்ளையும் பட்டணத்தயாராயிருக்கும் பொழுது அவரின் மாமனார் கும்பகோணமிருந்து தம்பெண்ணைக்கொண்டுவந்து ஸ்ரீமின்னே யிடம் ஒப்புவித்ததனால் மஸ்ராமல் மேலதிகாரியிடம் சென்று கப்பலேறும் உத்திரவையும் ரத்துசெய்து விட்டதினால் ஆகது ஸ்ரீ தண்டபாணிபிள்ளை மெஸபடோமியாசெல்வேன் டியபிரயாணம் தடைபட்டது. அன்று முதல் ஸ்ரீமான் தண் டபாணிபிள்ளை தாழ்த்தவர்களையும் பஞ்சமர்களையும் முன் னேற்றும் சங்கத்திற்சேர்ந்து, ஒவ்வொருசேரிக்கும் போய், மதுவிலக்கு, ஒழுக்கம், தெய்வபக்தி முதலியவற்றைப் பற்றி பிரசங்கங்கள் செய்து பொதுஜன நன்மைசெய்துவந்தார். சின்னாள் கழித்து, சிறந்த சிதசபக்த சிகாமணியும், சுதேச விவகாரங்கள் முற்றிலும் முணர்ந்தவரும் கல்வித்திருவாள ரும் தற்சமயம் "நவசக்தி" பத்திரிகையின் ஆசிரியரும் ஆகிய சென்னை ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்,

அவர்கள் நமது ஸ்ரீ பின்னிக்கு வித்யாலயங்களில் ஆசிரியாசன யும் பலவித்யாலயங்களில் சகோதரர்களையும் இன்னுமநேக வித்யாசாலைகளில் உத்தியோகஸ்தர்களையும் இருக்கவைத்தபடியால், அவருடன் கலந்து சென்னையில் தொழிலாளர் சங்கங்களைக் காண ஆரம்பித்ததுமின்றி, அபாரஸ்தாபனங்களைச் சேர்த்திச் சேர்த்து, ஸ்ரீமான் கிருஷ்ணசாமிசர்மாவுடன் கட்சியையில் சாதீயப்பிரசாரஞ்செய்யவும் ஆரம்பித்து விட்டனர். உடனே அரசாங்கத்தார் இந்தியபாதுகாப்புச்சட்டத்தின்படி ஸ்ரீமான் கிருஷ்ணசாமிசர்மா இனி எங்கேயும் பேசக்கூடாதென்றும் ஸ்ரீமான் பின்னியும் மற்றையோர்களும் கட்சியையில் இனி கூட்டங்கூட்டக்கூடாதென்றும் உத்தரவிட்டனர். இச்சமயத்தில் தான் சென்னையில் ஹஸ்டின்கம்பெனி தொழிற்சாலை இச்சாவி டன்; ஹஸ்டின் முதலியபத்திரிகைகள் வெளியாக ஆரம்பித்தன. உடனே நமது ஸ்ரீ தண்டபாணியும், ஸ்ரீமான் எ. ஸ்ரீராமுலுடன் கூடி உண்மை பிராமணரல்லாதார் கட்சியைத் “கோகலே” நாளில் கட்டியதுடன் ஸ்ரீமான் P. கேசவபிள்ளையின் அக்கிராசனத்தின்கீழ் சென்னை மகாஜனசங்கக் கூட்டம் நடைபெற்று காங்கிரஸை ஆதரித்து நின்றது. அந்தக்கட்டிடம் முன்முதல் “கோகலே” நாளில் கூடி ஆலோசனை, ஜஸ்டிஸ் கட்சியார் வந்து கலைப்படுத்தி போலீஸாரின் உதவியுடன் கூட்டத்தைக்கலைத்து விட்டனர். இருந்தாலும் ஸ்ரீமான் தண்டபாணிப்பிள்ளை மாத்திரம் தைரியத்துடன் இன்று அக்கூட்டத்தை Y. M. I. A கட்டிடத்தினில் கூட்டிப்பிரசங்கத்தை நடத்திக்கொண்டிருந்தார். சென்னை போலீஸ் சூபரிண்டெண்டென்ட் ஸ்ரீ P. பார்த்தசாரதிநாயுடு வந்து தடுக்கும் தன்மையுள்ள உத்திரவில்லாமல் நமது பிரசங்கத்தை நிறுத்தமுடியாதென்று ஸ்ரீ தண்டபாணிப்பிள்ளை சொல்லிவிட்டார். பின்னர் ஸ்ரீமான் கேசவபிள்ளை வந்து சொன்னபிறகு தமது பிரசங்கத்தை முடித்து உண்மைப்பிராமணரல்லாதா

தின் பாரணத்தைக்காப்பாற்றினர். இச்சமயந்தான் இவர் பெயர் இராஜ்யத்தமிழ்நாட்டிற்கு எட்ட ஆரம்பித்தது. எங்கெங்கே ஜஸ்டிஸ் கக்ஷி தோன்ற ஆரம்பித்ததோ, அங்கங்கே ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையையும், ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரையும், சேலம் டாக்டர், ஸ்ரீமான் பி. வரதராஜுலுநாயுடுவையும் கூப்பிடுவது வழக்கம். சேலம், திருச்சி, மதுரைமுதலிய பலவிடங்களுக்குப்போய் அரியவேலைகளை அக்காலத்திலேயேசெய்ய ஸ்ரீ பிள்ளை முன் வந்ததை நாம் என்றும் மறக்கமுடியாது. டாக்டர் நாயர், Sir, P. தியாகராஜசெட்டியார்முதலியோர் சேலத்தில் கூடியமகாநாட்டைச்சிதறவடித்து முதலியாரும் பிள்ளையும் அங்கேவந்து காங்கிரஸ் கக்ஷியைஸ்தாபித்தார்கள். திருச்சியில் தில்லைநாயகம்பிள்ளை படித்துறையில் பிராமணரல்லாதிகளை மானபங்கப்படுத்தி காந்தி சவுக்கில் தேசத்துரோக பிரசங்கங்கள்செய்துவந்த ஸ்ரீமான் T. V. சுப்பிரமணியன் முதலியோரை கல்மாரியும் கலகமும் இடைவிடாது நிகழும் போதும் மிகத்தைரியமாய் நடுநின்று பிரசங்கித்து வெட்கமுற்றுத்திரும்புமாறு செய்ததானது சகலருக்கும் ஞாபகத்திலிருக்கும். மதுரையில் டாக்டர்நாயுடுவை அரஸ்டு செய்தபிறகு ஸ்ரீ J. N ராமநாதன் முதலியோர்களை அடக்கி ஸ்ரீ தண்டபாணிபிள்ளை உபந்யாசம் செய்தது இன்னும் மறக்கமுடியவில்லை. இத்தனை வேலைகளையும் சென்னை ஆடிட்ஆபீஸ் உத்தியோகத்திலிருந்துகொண்டே தான்செய்துவந்தனர். இச்சமயத்தில் இவரின் இயக்கங்களையும், பிரசங்கங்களையும் கவனிக்கப்படுவதற்கு இரகசிய போலீஸ்உத்தியோகஸ்தர்களை அரசாங்கத்தார் நியமித்தனர். பின்னர் ஸ்ரீ பிள்ளை சென்னையில் குமாஸ்தாக்கள் சங்கமொன்று ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்தார். தான் உத்தியோகம் வகித்துவந்த ஆடிட்ஆபீஸிலேயே பிவருறைகளை

திருத்தமுடையன் றனர். அரசாங்கத்தினர் நாலண்டுகளின்பே ரில் ரயில்வேகம்பெனியார் ஸ்ரீபிள்ளையை ராஜிநாமா செய்யும்படி வற்புறுத்தவே பிள்ளையும் தனது பதவியை உடனே ராஜிநாமாசெய்துவிட்டார். இவருடன் சகாவா யிருந்த ஒருவரை வேலையைவிட்டு நீக்குதல்செய்தும், மற் றும் அறுவரை மைசூர்ரயில்வேயிற்கு மாற்றுதல்செய்தும் அவ்விடத்தில் அவ்வேலைகளுக்கு பரிமண்டுயேப்பர்களை ரெயி ல்வேகம்பெனியார் நியமித்தனர்.

3-வாழ்க்கையின்மாற்றம்.

சுமார் முப்பதாண்டுகளுக்குமுன் மேனாட் டிலிருந்து இருவர் இந்தியாவிற்குவந்து சென்னைக்குத் தென் பாருகிலுள்ள அடையார் என்னுமிடத்தில் சிலகாலம் நிலை கொண்டு அவ்விடத்தில் "பிரமஞானசங்கம்" (Theosophycal Society) என்னுமொருசங்கம் ஏற்படுத்தி அனேகருடையபடித்தவர்க்கத்தினை சாகிய பிரசங்கங்கள்செய்து ஏராளமான திரவியத்தையும் சம்பாதித்து காசியில் "சென் ட்ரல் ஹிந்துகாலேஜ்" என்னும் கலாசாலையை ஸ்தாபித்து உலகமெல்லாம் தங்களின் பெயரைப்பரவச்செய்து வந் தார்கள். அவர்களில் ஒருவராகிய மிஸஸ் அனிபெஸண்டு அம் மையை அறியாதவர் உலகில் ஒருவருமிலர். இந்த ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரால் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட "தாகூர் தேசியகலாசாலையில் புத்தகாலய பரிபாலகராக (Librarian) ஸ்ரீ தண்டபாணிபிள்ளை அமர்ந்து ராஜீயவிஷ யங்களைக்கவனித்தார். இன்னமும் சின்னாட்களுக்குப்பின், ஆங்கி லேய சில உபாத்தியாயர்களின் திருத்தமுடையன்றிப்போது, அவ்வு பாத்தியாயர்களுக்குக் காரணமாயிருந்த சிலரின் அப்பிரியத்திற்கா ளாகி ஸ்ரீபிள்ளை அந்த வேலையைவிடுத்து அனிபெஸண்டம் மையால் நடத்தப்படும் "நியூஇந்தியா" பத்திரிகையிலின்

13 125915

பொக்கிஷதாரராக (Cashier) அமர்ந்து பத்துமாதம் வேலை பார்த்துவந்தார். அப்பொழுதுதான் பெஸண்டம்மை, வாடியா, அருண்டேல் ஆகியமூவரும் அரசாங்கத்தினரின் பாதுகாப்பிலிருந்து வெளிவந்தசமயம். வந்ததும்பெஸண்டம்மையுடன்சேர்ந்து யோசித்து "ஹோம்ரூல்" சங்கங்களை ஸ்தாபித்தார். ஸ்ரீ வாடியாவுடன்கூடி தொழிலாளர்களுக்காக உழைத்துவந்தார். "நியூஇந்தியா" ஆபிஸில் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை எல்லோருடைய அன்பையும் பெற்றபடியால் அங்கேதான்முதன்முதல் அச்சுக்கோர்ப்போர் சங்கமொன்றையும், வெளிவேலைசெய்வோர்சங்கமொன்றையும், குமாஸ்தாக்கள்சங்கமொன்றையும் ஸ்தாபித்துநடத்திவந்தார். ஸ்ரீமான் வாடியா பம்பாயிக்குப்போயிருந்தபொழுது சென்னையில் கொள்ளையும், வேலைநிறுத்தங்களும்நடந்தன. அச்சமயம் மேற்படி சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்யாமலிருக்கும்படி ஸ்ரீபெஸண்டம்மை தண்டபாணிபிள்ளை நேரில்போய்வாதாடியும் ரூ1000-க்குமேலாக "நியூஇந்தியா" ஆபிஸில் வேலைபார்க்கும் சகலருக்கும் சம்பளஉயர்வும் ஏற்படுத்திக்கொடுத்தார். ஸ்ரீ வாடியா திரும்பிவந்ததும், இன்னும் ஸ்ரீபிள்ளை சம்பளஉயர்வு ஏற்படுத்திக்கொடுத்ததைப்பற்றி தம் ஆபீஸிலுள்ள யூனியன்களைக்கலைத்துவிடும்படி பிள்ளையிடம்சொன்னார். இச்சமயத்தில்தான் ஸ்ரீமதி பெஸண்டம்மையும் கல்கத்தா காங்கிரஸிற்குப்பிறகு இராஜீயத்துறையில் ஒருகாலம்போய்ட்டு பிதலாதத்திலிறங்கினார். அபிப்பிராயபேதத்தினாலும், சங்கத்தைக்கலைக்கச்சம்மதிக்காததினாலும், ஸ்ரீ தண்டபாணிபிள்ளையும் "நியூஇந்தியா" ஆபிஸ் காஷியர் வேலையை விட்டு விலகிவிட்டார்.

4—பொறுப்பும் போராட்டமும்.

உலகிலுள்ள சகல சராசரப்பிராணிகளிலும் மனிதன் அறிவிலும், ஆன்மஞானத்திலும், மேம்பாடுடையவன் என்பது

அறிஞர்யாவரும் ஒப்புக்கொண்டவிஷயம். இத்தகைய அறிவைச்சற்சங்கப்பழக்கத்தினுலும், ஆன்ம ஞானம் அல்லது ஆன்மசக்தியை அனைத்துயிரினிடத்தும் வைத்துள்ள அன்பின்பெருக்காலும், ஜீவகாருண்யத்தாலும் அறிந்தோர்; அறியாமலோ, அமையச்செய்துகொண்டமனிதனின் இலக்ஷணங்களில் முக்கியமானது தனதுநிலைமைக்கும் சக்திக்கும் செய்தற்குரியகாரியங்களைச் செய்துமுடிப்பதே! அஃதங்ஙனமாக முந்தின அத்தியாயத்திற் சொல்லிமுடித்தவிஷயங்கள் நடந்தபிறகு நமது ஸ்ரீ தண்டபாணிப்பிள்ளை சூளையில் தம்முடைய போரல் ஒருபங்களாவைவாடகைக்கமர்த்திக்கொண்டு அதில் தொழிலாளருக்கென்றொரு அரிசி பண்டகசாலையை ஏற்படுத்தினர். பன்னீராயிரமெம்பர்களடங்கிய சென்னை தொழிலாளர்சங்கத்திற்கும், அதேபங்களாவில் இடங்கொடுத்துத் தாமும் குடும்பத்துடன் 1920 ஆம் மார்ச்சுமீ வரையில்வசித்து வந்தார். சென்னைதொழிலாளர்சங்கம் இன்னமும் அதேயிடத்திற்றான் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாருடைய தலைமையின்கீழ்நடந்துவருகிறது. ஸ்ரீ தண்டபாணிபிள்ளை பன்னீராயிரம் தொழிலாளர்களடங்கிய சென்னை தொழிலாளர்சங்கத்திற்கு மானேஜராயும், எழாயிரமெம்பர்களடங்கிய ரயில்வே (M. S. M. Ry.) தொழிலாளர் சங்கத்திற்குக்காரியதரிசியாயும், ரிக்ஷாயூனியனுக்குத்தலைவராயும் மவுண்ரோட்டு தொழிலாளர்சங்கத்திற்கு உபதலைவராயுமிருந்து அரியவேலைகள் செய்துவந்தார்.

1918-ம் வருஷம் காஞ்சீபுரத்திலும், 1919-ம் வருஷம் திருச்சியிலும் நடந்த சென்னைமாகாணக்கான்பரன்ஸ்களுக்கு ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளைதான் முதன்முதலில் தொழிலாளர்களைப் பிரதிநிதிகளாக அழைத்துக்கொண்டுவந்தவர். 1919-ம் வருஷம் அமிர்தஸரஸில்கூடிய அகில இந்தியகாங்

கிரஸ் மகாசபைக்குச் சென்னைத் தொழிலாளர்களின் பிரதிநி யாக, ஸ்ரீ தண்டபாணிப்பிள்ளை போயிருந்து தொழிலாள ரைப்பற்றிய தீர்மானமும் செய்வித்தார். தமது ஸ்ரீ பிள்ளை யின் பெருமுயற்சியால் தொழிலாளர்பிரதிநிதிகளுக்கு அமி ருத லைஸ்வர மேற்றுக்கமிட்டியார் ஆகாரமும்இருப்பிடமும் இலவசமாக உதவினதுமல்லாமல் டெலிகேட்டுடிக்கட்டுகளும் கொடுத்து உதவினார்கள். ஆங்குள்ள விஷயாலோசனைக்கமிட் டியில் ஸ்ரீ பிள்ளையையும் ஒருமெம்பராகவிருக்கும்படியாக ஏற்பாடுசெய்தபின்னர், சில சென்னைவாசிகளின் குறும் பால் அவர் விஷயாலோசனைக்கமிட்டியில் இருக்கக்கூடா தென்று [illegible] ஏற்பட்டும், இரண்டுமணிநேரங்களுக்கு அதி கமாசவே, தம் உரிமையைக்காத்துக்கொள்ளுநிமித்தம், ஸ்ரீ பிள்ளையும் தைரியமாய்ச்சண்டையிட்டு, ஸ்ரீமான் மோதிலால்நேருவிடமிருந்து, பிரத்தியேகமாய் ஒருத்தரவு பெற்று விஷயாலோசனைகமிட்டியில் வீற்றிருந்தார். இந் தச்சச்சரவினால் இரண்டு மணிநேரம் அம்மகாசபையில் விஷ யாலோசனைக்கூட்டம் தடைபட்ட விஷயம் இங்குகுறிப் பிடத்தக்கதே!

அனிபெஸண்டம்மை குட்டிக்கரணம்போட்டபிறகு, “கோக்லே” ஹாலில் ஸ்ரீ C. விஜயராகவாச்சாரியார் அக்கிராசனத்தின்கீழ் கூடிய, பிரத்தியேக மஹாஜனக்கான் பரன்ஸை, அனிபெஸண்டு அடையார்கோஷ்டியார் கெடுத் துவிட முயன்றதை ஸ்ரீமான் பிள்ளை ([illegible] ஆபீ ஸில் இருக்கும்போது) தக்கசமயத்தில் வந்துயாதொருகல கமுமில்லாமல் தேசியகக்ஷிக்குஜெயத்தைஉண்டுபண்ணினர். அன்று விழுந்த பெஸண்டம்மை காளாதுவரையில் எழுந்தி ருக்கவில்லை. சிலபோலித்தலைவர்கள், தேசியவாதிகள் என் றுசொல்லிக்கொண்டு, சௌந்தரியமஹாலில், ஒரு தேசியக் கான்பரன்ஸ் கூட்டினார்கள். அதற்கு காத்தக்குடி ஸ்ரீமான்

௩. பொறுப்பும் போராட்டமும்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை உபதலைவராய் இருப்பதற்கு ஒத் துக்கொள்ளாமை அத்தால், தொழிலாளர்களைக்கொண்டு அவ ர்கள் பண்ணைக்கூட்டினோர் என்னைம் பயிக்கா துபடி அவசர படுத்திக்கொண்டு ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளையுட்பட எல்லோரும் அதிலிருக்கும்படி ஸ்ரீ தண்டபாணிபிள்ளை செய்துவிட்டார். இதனால் அந்தப்பொன்ற்தேசீயக்கவி யானது பிறந்தன்றைக்கே இறந்துவிட்டது.

5—அதிகாரிகளின் கர்ஜனை.

"இன்றுமை வேண்டின் வெருக விக்கிலத்து
யான் ஊதல் வேண்டினிசைப்படுக—தனைறுந்து
செல்வது வேண்டினறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளிவிடல்."

1918-ம் வருஷம் செங்கற்பட்டு ஜில்லாகான்பரன்ஸ் ஸ்ரீமான் பி. வி. நரசிம்மய்யரின் அக்கிராசனத்தின் கீழ் செங்கற்பட்டுமுனிசிபல் கட்டடத்தில் நடைபெற்றது. அதைத்தடுக்க வேணுமென்று ஸ்காட்பிரௌன் (Scot Brown) என்ற சப்கலெக்டர் வந்தது அவ டன் கூட்டங்கலைய ஆரம்பித்தது. உடனே ஸ்ரீமான் பி. வி. நரசிம்மய்யர் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையை காங்கிரஸ்தீர் மானத்தைப்பற்றி பிரசங்கம் செய்யும்படிக் கேட்டுக் கொள்ள, சுமார் ஒருமணி நேரம் வெகு அழுத்தமாயும் இடைவிடாமலும் பேசியதினால் போனகூட்டம் திரும்பி யும் வந்து அதிகாரியினால் கலைக்கவும் படாமல், கான்பரன் ஸ் இனிது நடைபெற்றதைப்பற்றிப் பத்திரிகைகள் வெ குவாகப் புகழ்ந்தெழுதின. சென்ற வருஷம் மதுரை இராம நாதபுரம்ஜில்லா மகாநாடு சாத்தூரில் நடைபெற்றபோது, நாடார்களைக் கோவிலுக்குள் நுழையவிட வேண்டுமென்ற தீர்மானத்தில், ஸ்ரீ பிள்ளையவர்கள் பேசி வரும்போது, பெ ரிய கலகமும் குழப்பமும் ஏற்பட்டும் ஸ்ரீ தண்டபாணி

பிள்ளை தாம் பேசியது சரியென்று வாதித்ததுமல்லாமல் அவைகளிலிருந்து ஒரு வார்த்தை கூட வாபஸ் வாங்கமுடியாதென்றுங்கூறி விட்டார். பின்னர் ஒருவாறு கான்பரன்ஸும் முடிந்தது.

1919-ம் வருஷத்தில் திருச்சியில் கூடிய மகாணமகாநாட்டில் வைஸிராய் போக வேண்டுமென்ற தீர்மானத்தை ஸ்ரீ பிள்ளை குறிப்பிட்டவுடன், மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த கனம் ராமநாதபுரம் ராஜா கான்பரன்ஸை விட்டு வெளியிற்போய் அந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிய பிறகு உள்ளே வந்தார். அதன் பின்னர் ஈரோட்டில் நடந்த சென்னை மாகாணக் கான்பரன்ஸில், ஸ்ரீ தண்டபாணி பிள்ளை வாலண்டியர்களுக்கு காப்டனாயிருந்து வெகுசிறப்பாய்க் கூட்டத்தை நடத்தி வைத்தார். அப்பொழுது அதே வைஸிராய் கூப்பிடப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற அப்படி லாட்கோவிந்ததாஸ் அக்கிராசனத்தில் செய்வித்தார். திருநெல்வேலி கான்பரன்ஸில், பிராமணரல்லாதார்க்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஸ்ரீ S. ஸ்ரீனிவாசய்யங்கார் அக்கிராசனத்தில் கொண்டு வந்த பொழுது அது ஒருவாறாய் நிறைவேறியது. சென்னையில் ஸ்பர் டாங்கில் (Spur Tank) மீடிங் நடந்த போது, அடிபட்ட பிராமணர்களுக்கு ஸ்ரீ பிள்ளை சிகிச்சை செய்ததானது, பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்தது. இவர் போகாத கான்பரன்ஸ் இல்லையென்றே சொல்லலாம். திருச்சியில் நடைபெற்ற இந்திய பாதுகாப்புப்படையி (I. D. F.) ல் B கம்பெனியில் இவரது சகோதரராகிய ஸ்ரீ குஞ்சிதபாதம் பிள்ளையுடன் சேர்ந்து யுத்தப்பயிற்சி கற்றுக்கொண்டார்கள். இவரது திறமையை மெச்சி 250 பெயர் அடங்கிய அப்படைக்கு நமது ஸ்ரீ பிள்ளையைத்தான் (காப்டன் க்ரோஸ்) என்பவர் "லான்ஸ்கார்ப்" என்னும் பட்டத்தைக் கொடுத்துத் தலைமையாக்கினர். அத்த

டுத்த ஒரு வாரத்திற்குள் ஸ்ரீ பிள்ளையின் சகோதரர் குஞ்சித பாதம் பிள்ளைக்கு அப்பட்டம் கிடைத்தது. அதன் பிறகு 1½ மாதத்திற்குப் பின் மற்றையோருக்கு அப்பட்டம் வழங்கப்பட்டது. அந்த ஒன்றரை மாதகாலமும், B கம்பெனியிற் சேர்ந்த டிப்டி கலெக்டர், தாசில்தார், மாஜிஸ்ட்ரேட், பாரிஸ்டர்கள், வக்கீல்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், முதலிய அப்படையிற் சேர்ந்த பேர்களும் ஸ்ரீ தண்டபாணி பிள்ளையின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். அதுவரையில் பட்டாளத்திலும் இந்தியர்கள் சரியாகக் கவனிக்கப்படாமையினால் சமத்துவத்திற்காக அங்கேயும் சண்டையிட்டிருந்தும் தமது "லான்ஸ்நாயக்" என்னும் பட்டத்தையும் தேவையில்லையென்று மறுத்துக் கொடுத்து விட்டார். திருச்சியில் இந்தியபாதுகாப்பு படையிருக்கும்போது, ஆம்புலன்ஸ், போட்டிப்பந்தயத்திற்காகச் சென்னைக்குத் தன் தலைமையின் கீழ் ஒரு படையைக் கொண்டு போய் ஜயித்ததினால் சென்னை கவர்னரின் மனைவி, லேடி பெண்ட்லண்டு ஒரு பதக்கம் (Medal) பரிசு கொடுத்திருக்கிறார். அதற்கு முன் அதே விஷயத்திற்காக லார்டு பெண்டுலண்டும் ஓர் பதக்கம் பரிசளித்திருக்கிறார்.

1919-ம் வருஷம் ஏப்ரல் 6-தேதி நடந்த சத்தியாக்கிரகதினத்தன்று, சுமார் பதினாயிரம் தொழிலாளர் படைகளைத் திரட்டிக்கொண்டு, மௌனவாத்தியத்துடனும், பஜனை கோஷ்டிகளுடனும் சென்னைமாநகரை வலம் வந்து போலீஸாரின் எதிர்ப்புக்கஞ்சாது, படைகளைச் சாத்வீகமாய் கடற்கரைக்கு நடத்தி வந்து, பிரசங்க வாயிலாக அவர்களின் கடமையை யெடுத்துரைத்துப் பின் அவர்களைத் திருப்பியும் அமைதியுடன் வீடு சேர்ப்பித்த தளகர்த்தரான ஸ்ரீ தண்டபாணி பிள்ளை சென்னையில் அநேக சங்கங்களின்

வேலைநிறுத்தம் செய்து ஜெயத்துடன் முடிவுக்கு வந்திருப்பதுந் தவிர, மதுரை, நாகை, முதலிய விடங்களிலுள்ள தொழிலாளர் சங்கங்களிலும் அநேக பிரசங்கங்களைச் செய்து பயனடையச்செய்திருக்கிறார்.

"தேசபக்தன்" என்னும் தினசரிப்பத்திரிகையின் முதல் ஜாமீன் பறிமுதல் செய்யப்பட்ட பொழுது, அந்தப் பத்திரிகையையும், அச்சாபீசையும் வாங்கி, "காங்கிரஸ்" என்கிற நாமஞ்சூட்டி ரூ. 2500 ஜாமீனும் கட்ட ஆயத்தமாயிருக்கையில், அதற்காகப் போலீஸார் ஸ்ரீ பிள்ளைமீது விரோதக் குற்றஞ்சாட்டினார்கள். அதற்காக ஸ்ரீமான் ஸ்ரீ C. ராஜகோபாலாசாரியார் தாம் வக்கீலாயிருந்து வாதித்தார். பிராசிக்யூஷன் சாக்ஷிகளாக சென்னை சிப்பிசவி டென்ஸிமாஜிஸ்ட்டிரேட், திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார், காமத், முதலியோர்கள் விசாரிக்கப்பட்டு சாதகமாய்ச்சொல்லியும், ஸ்ரீ தண்டபாணி பிள்ளைக்கு ரூ 100-அபராதமும் தவறினால் ஒரு மாதக்காவலு மென்று தீர்ப்புச்சொல்லப்பட்டது. ஸ்ரீ பிள்ளை ஜெயிலுக்குப் போகத் தயாராயிருந்தும், யாரோஒர் அனுதாபி பிள்ளைக்காக ரூ 100-ஆகிய அபராதத்தொகையைச் செலுத்திவிட்டார். ஸ்ரீ பிள்ளை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தும் தண்டனை உறுதி செய்யப்பட்டது. இதுவரை செய்துவந்த தொண்டுயெல்லாம் ஸ்ரீ பிள்ளையின் சொந்தச்செலவிலேயே நடைபெற்றது. சிறைக்குப்போய் வந்த பெண்டட்டம்மையை வரவேற்கக்கூடாதென்று பிள்ளை சொல்லியும், திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் தொழிலாளர்களைக்கொண்டு வரவேற்றமையினால் ஸ்ரீ பிள்ளை சென்னையை விட்டு 20-ம் வருஷம் மார்ச்மாதம் கும்பகோணம் வந்து, வருவாய்க்கு ஒரு வழி தேடவேண்டி அவர்மாமனருடன் சேர்ந்து, (M. S. V. R. S. N.) தண்டபாணிபிள்ளை அண்டுகம்பெனி, என்ற ஒரு மளிகை மண்டி ஏற்படுத்தி வியாபாரஞ் செய்துவர

[illegible]

தார். செய்துவந்தும். அடிக்கடி தேசியப்பிரசாரஞ் செய்யும் தொழிலிலேயே ஈடுபட்டிருந்ததினிமித்தம் தொழில் முறையைக் கவனிக்க அவகாசமில்லாது போய்விட்டதே, மண்டியில் ஏராளமான நஷ்டம் உண்டாயிற்று. உடனே கூட்டாளிகளை விடுத்துத் தனியே பிரிய வேண்டியதாயிற்று. பிரிந்து எஞ்சிநின்ற முதலுக்குத்தக்க ஒரு தனிக்கடை வைக்கச் சிலநாளில் அதுவும் முன்னிலைமையையேயடைந்தது. நம் நாட்டின் உத்தம தேசபக்தர்களாகிய சுப்பிரமணியசிவம், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம்பிள்ளை, வ. வே. சு. ஐயர், சி. சுப்பிரமணியபாரதி போன்ற தலைவர்களே உதவிசெய்வாரின்றித் தவிக்கிறபோது, நமது தண்டபாணிபிள்ளையைப் பற்றிக் கேட்பானேன்? இவர் தந்திபடிக்கும் சர்க்கார்பரிக்ஷையில் இவ்விராஜதானியிலேயே முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து, நற்சாக்ஷிப்பத்திரம் பெற்றிருந்தபடியால், மேற்படியும் 1920-ஆம் நவம்பர் மாதத்தில் (S. I. R.) ரயில்வேயில் தந்திபடிக்கும் உத்தியோகம் பெற்று 6ம் திருப்பாதிரிப் புலியூர்ஸ்டேஷனில் வேலைபார்த்து வந்தார். அப்பொழுது தான் தொழிலாளர்சங்கங்கள் ஏற்படுத்துவதும், ராஜீயப்பிரசாரங்கள் செய்வதுமாயிருந்த சமயமானதினாலும், ஒத்துழையாமையியக்கம் ஆரம்பமானபடியாலும், வேலையை அப்படியும் ராஜிநாமாசெய்து விட்டு 1921-ம் வருஷம் மார்ச்சுமாதம் முதல் ஸ்ரீமான் பந்துலுஐயரின் ஆதரவில் கும்பகோணம் காங்கிரஸ்சபையின் கீழ் காங்கிரஸ்பிரசாரஞ் செய்து வந்தார். உடனே மேற்படியும் ரகசிய (C. I. D.) போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டேபிள்கள் பலரும் நியமித்தனர். ஒருநாள் கூடத்தவறாமல், தேகசவுகரியத்தையும் கவனியாமல் ஸ்ரீபிள்ளை பிரதிதினமும் ஒவ்வொரு ஊரிலும் பிரசங்கம் செய்துவந்தார். பாமரஜனங்களுக்கும் படித்தவகுப்பினருக்கும் நமது தண்டபாணிப்பிள்ளை

…ப்பமான உபயோகங்களுடன் பிரசங்கம் செய்யும் ஆற்றலாளர் தமிழ்நாட்டில் அரிதென்றே சொல்லலாம். எந்த இடத்திற் பிரசங்கம் புரிந்தாலும் அங்கே பலன் கைமேல் கிடைக்கும். 1921-ம் வருஷம் தஞ்சையில் கூடிய வர்ணாச்ரம தர்மகான்பரன்சைப் பற்றி நமது பிள்ளையின் அபிப்பிராயத்தை 1921 ஜூன் மாதம் 26-ந் தேதி வெளிவந்த "தமிழ் நாடு" பத்திரிகை அடியிற்கண்டவாறு கூறுகிறது.

வருணாஸ்ரம தர்மமும் தேசீயமகாநாடும்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்கு வருணங்களும், பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு ஆசிரமங்களும் சேர்த்து ஆரியர்களால் வருணாஸ்ரம தர்மம் என்று அழைக்கப்படுகிறது. பிராம்மணனுக்கு சர்மா என்றும், க்ஷத்திரியனுக்கு வர்மா என்றும், வைசியனுக்கு குப்தா என்றும், சூத்திரனுக்கு தாசன் என்றும் பொதுவாய்ப் பட்டப்பெயர்கள் வழங்கிவருகின்றன. திராவிடர்களாகிய தமிழ் மக்களில் கற்றறிந்த சில புலவர்கள் தற்காலம், திராவிடர்கள் மை ஆரியர்களால் வகுக்கப்பட்ட வருணாஸ்ரமத்தில் சேர்க்கப்படாதவர்கள் என்றும் தமிழ் பாஷையே சம்ஸ்கிருதத்தின் உதவிபெறாத தனித்தியங்கும் பாஷையென்றும், சங்கமேற் நூல்களிலிருந்தும் பண்டைத்தமிழ்மன்னர்களின் சரித்திரங்களிலிருந்தும் தமிழர்களின் அறிவு வளர்ச்சியையும், இராஜீய ஒழுங்கு முறையையும், நாகரீகத்தின் உன்னத நிலைமையையும் நாளது வரை உலகத்தினர் ஒப்புக்கொண்டு போற்றிவருதலால், ஆரியர்களின் வருணாஸ்ரம தர்மம் திராவிடர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் கூறிவருகின்றனர். இவ்வுண்மையை நாம் பின்னர் விசாரிப்போம். தற்காலம் பிராமணர்களெல்லோரும், உலகத்திலேயே க்ஷத்திரியர்களும்,

வைசியர்களும் அதிக்துவிட்டதாக எண்ணி தங்களை தவிர்
த்து இதரர்களை சூத்திரர்கள் என்று சொல்லியும் அநு
பாகத்தில் நடத்தியும் வருகிறார்கள். தென்னாடாகிய இந்
தமிழ்நாட்டிலேயும் திராவிடர்களாகிய ஒரு பெருஞ்சமூகத்
தார் இந்த சூத்திரர் என்னும் பாகுபாட்டிலிருந்து தப்ப
முடியவில்லை. எவ்வரு வருணத்திலும் சண்டாள விருத்தி
களைச்செய்து, புலாலுண்டு, ஆத்மஞானம் பெறுதல்
தால் கட்டடங்கொண்டு, சரீரமேதானென்று நினைத்து
துன்மார்க்கருக்குள் ஜாதி பேதமில்லையென்று சமரசத்தை
சர்க்காமல் சண்டையிட்ட மூடர்களை சண்டாளர் என்
றும், பறையன் என்றும், சக்கிலி என்றும் பிரித்து அந்
வது வகுப்பாய் பஞ்சமர்களென்று பொதுப்பெயரிட்
ாகவும் இவர் கூறுகின்றனர். இதுவும் ஆரியர்கள் வரு
ணத்திலிருந்து தோன்றியதால் ஆதி திராவிடர்களாகிய
தமிழ் நாட்டின் பூர்வீகக்குடிகளைக் கட்டுப்படுத்தாதென்று
தமிழ்ப் பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆகை
தலான் தமிழ்நாட்டில் திராவிடர்களும் ஆதித்திராவிடர்
களும் சேர்ந்து பிராம்மணர் அல்லாத வகுப்பினர் என்
று பொல்லாத கட்சியை அதிகாரிகளின் ஆட்சியாக
டுத்தி, அவர்களின் ஆயுதமாய் நின்று குலத்தை கெடுக்
க்த கோடாரிக் காம்புகள்போல், தங்கள் தாய்நாட்டின்
முன்னேற்றத்தைக் கவனியாமல் தேசத்துரோகஞ் செய்து
வெள்ளையரிடம் நம்மை இன்னும் அடிமையாக்க ஆதரிக்
கின்றனர். இதனால் பிராமணரல்லாதாரின் ஒற்றுமையா
வது அவர்கள் ஏற்படுத்திய சங்கத்தையாவது நன்
மைகூறவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் முன்னேற்றத்
தைமட்டும் கவனியாமல் பாரத மாதாவின் சுதந்தர
த்திற்கு இடையூறாய், திராவிடமாய் ஏற்படுவதைத்தான் இச்சபை
யை நாம் கண்டிக்கவேண்டியிருக்கிறது. திருகசௌராஷ்டு

சப்பிராம்மணர்களும், விஸ்வகுலப்பிராமணர்களும் போன்றவர்கள் தங்களை முதல் வருணத்தில் சேர்க்கவேண்டுமென்று வாதித்து வருகின்றனர். வன்னியகுலக்ஷத்திரியர்கள், அக்கினிகுலக்ஷத்திரியர்கள், பார்க்கவகுலக்ஷத்திரியர்கள்போன்ற அநேக திராவிட வகுப்பினர் தங்களை க்ஷத்திரியர்வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று தீர்மானித்து வருகின்றனர். கோ வைசியர்களென்றும், தன வைசியர்களென்றும், பூ வைசியர்களென்றும் சில வகுப்பினர் சொல்லிக்கொண்டு மூன்றாம் படிக்கட்டில் நிற்கின்றனர். சூத்திரன் என்னும் பதத்திற்கு ஏவலன் அடிமை கூலி தாழ்ந்தவன் என்று புலவர்கள் அர்த்தம் செய்கின்றனர், விதண்டாவாதிகள் சகலவருணத்தாரையும் ஆட்டவும் அடக்கவும் சூஸ்திரம் கற்றவர்களானதால் சூத்திரர்களென்ற காரணப்பெயர் வந்ததாய்ச் சொல்லித் தங்களைத் தாங்களே பெருமை பாராட்டிக்கொள்ளுகிறார்கள். அவை எப்படியிருந்தாலும் தற்காலம் சூத்திரஜாதியில் யார் யார் எந்தெந்த வகுப்பினர் சேர்க்கப்பட்டிருக்கின்றனரென்பது எனக்கு விளங்காததுபோல் மற்றையோர்க்கும் விளங்கியிராதென்றே நினைக்கிறேன். சுதந்தரசக்தி பரவினும் இக்காலத்திலே அடிமையென்னும் பொருள்படும் சூத்திரஜாதியென்னும் அந்தக்காரநாட்டில் ஒரு வகுப்பினரும் குடியேற மாட்டார்களென்றே நம்புகின்றேன். தொண்டமண்டலமுதலியார்களும், காரைக்காட்டு வேளாளர்களும், வியாபாரம் செய்யும் வேளாண்செட்டிகளும், சோழமண்டல சைவவேளாளர் குலத்துதித்த நானும் ஏனையோர்களும் எவ்வருணத்தில் எந்தப்படியில் இருக்கிறோமென்பது தெரியவில்லை. இதைத்தெரிவிக்கும் பெரியோர்களுக்கு எம்நன்றி உரியதாகுக. ஆரியரும் திராவிடரும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு மேலாகவே இந்நாட்டில் தங்

களுக்குள் யாதொரு ஏற்றத்தாழ்வன்னியில் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆகலால் தற்காலம் சற்றுங் கலப்பில்லாத ஆரியனையும் திராவிடனையும் இத்தமிழ்நாட்டில் ப்ருதியாகக் காண்டல் அருமை. இங்ஙனமிருக்க நம்மக்குள் பிளவு ஏற்படுத்தி பிரித்தாள முயற்சி செய்த அதிகாரிகளின் சூட்சியில் விழுந்த பிராம்மணரல்லாதாரை நாம் கண்டிக்கும் பொழுது, அதற்குத் துணை போவதுபோலவும், யானை தன்தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வது போலவும், சுயநலங்கொண்ட, கற்றறிந்தும் தூரான நோக்கமில்லாத சில வைதீகப்பிராமணர்களென்று சொல்லிக்கொள்ளும் சிலர் "தங்கள் பங்கென்ன சொத்தையா" என்று சொல்லி தேசநலத்திற்கும் ஒற்றுமை வளர்ச்சிக்கும் கேடுசூழவெண்ணி வருணாஸ்ரமதர்மக் காங்பரன்ஸ் ஒன்றைத் திருச்சியில் கூட்டப்போகும் தேசிய மகாநாட்டுப் பந்தலில் அதேகாலத்தில் கூட்டி "குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது" போல், தீண்டாமையை ஒழித்து ஒற்றுமையை உண்டுபண்ணி சுயராஜ்யம் அடையவேண்டிய இம்மாநாட்டில் வேற்றுமையை உண்டுபண்ணி ஜாதிப்பகைமை மூட்டி, சுயராஜ்யகால அளவை நீட்டி, அடிமையைப் போதிக்கும் வருணாஸ்ரம தர்மத்தை நிலைநாட்ட பெருமுனைப்படுவதை நாம் கண்டிக்காமல் இருக்கமுடியவில்லை"

எவர் கூப்பிட்டாலும் பிரசன்னத்திரத்து ஸ்ரீபிள்ளையவர்களையே வரும்படி எழுதுவது வழக்கம் இத்தகைய ஒரு தேசபக்தருக்கு அதிகாரவர்க்கத்தினர் கொடுக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் இப்பொழுது வந்திருக்கின்றன. அவைகள் 124-A, 153-A, 107-D, 108 I.P.C 144 (அதைத்தீர்ப்பதினிமித்தம்) 188, இன்னும் எத்தனைவருமோ தெரியவில்லை. சிறைவாசஞ்செய்யும் பதவியை ஸ்ரீபிள்ளை சந்தோஷமாய் எதிர்பார்த்திருந்தார். முதல் முதல் தமிழ்நாட்

ஸ்ரீ தெண்டபாணிபிள்ளை சட்டத்தை முதலில் மீறினர் உசு

டில் 141-ம் விதியை மீறி நடந்தவர் ஸ்ரீ தண்டபாணிபிள்ளையே. இவர் மீது சாட்டியது போல் இவ்வளவு குற்றங்களை அதிகாரிகள் வேறு எவர் மீதும் சாட்டவில்லை. ஸ்ரீ பிள்ளை 144-ஐ மீறிய விஷயமாக 1921-ம் ௵ நவம்பர் மாதம் 27-ந் தேதி வெளியான தமிழ்நாடு பத்திரிகை அடியிற்கண்டவாறு கூறுகிறது.

ஸ்ரீ: தெண்டபாணிபிள்ளை சட்டத்தை மீறி நடந்தார்.

நாளது நவம்பர் ௴ 13௳ ஞாயிற்றுக்கிழமை மாலை மாயூரத்திற்கடுத்த கீரங்குடி கிராமத்தில் மௌல்வி அம்ஜீத் இப்ராஹிம் சாயபு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சுமார் 3000-ஜனங்கள் அடங்கிய ஒரு மகாநாடு கூடிற்று. அதில் சிதம்பரம் ஸ்ரீமான் ப. தண்டபாணிபிள்ளையவர்கள் முதன் முதலில் பிரசங்கம் செய்துகொண்டிருக்குமிடையில் போலீஸார் வந்து மாயூரம் தாலூக்கா முதல் வகுப்பு ஸ்டேஷனரி மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் சங்கரநாராயணய்யரால் 144-வது பிரிவின்படி போடப்பட்ட ஒரு உத்தரவை ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கு சாதரா செய்தார்கள். அதன் சாராம்சமாவது இந்த ராஜதானியின் பல பாகங்களிலிருந்து அலாக்ஸ்நானத்திற்காக பக்தகோடிகள் மாயூரத்திற்கு (காவேரியில் தீர்த்தமாட) வருவார்களானதால் அப்பொழுது ஸ்ரீமான்களான தண்டபாணிபிள்ளை, அம்ஜீத் இப்ராஹிம் சாயபு, பத்தலப்பத் சேஷாத்திரி அய்யர், மகம்த் பாருக் சாயபு, ஆகிய ஐவரும் பிரசங்கம் செய்வதினாலும், கூட்டங்களில் பிரசன்னமாயிருப்பதிலும் பொதுஜன அமைதிக்குப் பங்கமும், கலகமும், கஷ்டங்களும், உபத்திரவங்களும் உண்டாகுமென்று மாஜிஸ்ட்ரேட் அறிய வருவதால் 13௳ யாகிய இன்று முதற்கொண்டு 2-மாசம் வரையில் மாயூரம் முனிசிபல் எல்லைக்குள்ளும் தாலூக்காவிற்குள்ளும் மேற்கண்டவர்கள் எந்தக்கூட்டத்திலும் பிர

சங்கமாருயிக்கவாவது, பிரசங்கம்செய்யவாவது கூடாதென
ன்றுஎழுதியிருந்தது. இந்தஉத்தரவைஸ்ரீமான்தெண்டபாணி
பிள்ளையவர்கள். தமது பிரசங்கநடுவில் பெற்றுக் கொண்ட
தும் இதை படித்து பொதுஜனங்களில் ஒருவராகிய ஸ்ரீ அப்
துல்ரஹிமான் சாயபு எழுந்து "ஸ்ரீ தண்டபாணிபிள்ளை
இதையெல்லாம் பயந்து தமதுபிரசங்கத்தை நிறுத்தமாட்
டாரென்றும், சட்டத்தை மீறி நடக்க காங்கிரஸ் நிருவாக
சபை உத்திரவு கொடுத்திருக்கிறதென்றும், நமக்கு அம்மா
திரி உத்திரவு கிடைத்தால் உடனே மீறி நடக்கத் தயாராய்
இருப்பதாயும்" கூறினார் பொதுஜனங்கள் எல்லோரும் ஏக
மனதாய் சட்டத்தை மீறிப்பேசத்தான் வேணுமென்று
ஸ்ரீ பிள்ளையவர்களை கட்டாயப்படுத்தினார்கள். உடனே ஸ்ரீ
மான் பிள்ளையவர்கள் எழுந்திருந்து அந்த உத்திரவு கொ
ண்டு வந்திருந்த போலீசு இன்ஸ்பெக்டரை பார்த்து இக்கூ
ட்டத்தை அவரே கலைத்து விட்டால், தாம் பிரசங்கத்தை
நிறுத்தி விடுவதாய்க் கூறியும், கூட்டத்தைக்கலைக்க போலீ
சார் மறுத்துவிட்டனர். அதன் பின் பிள்ளையவர்கள் 144-
-வது செக்ஷன் தம்மைப் பிரசங்கநடுவில் வந்து தடுக்க முடி
யாதென்றும், இன்றைக்கு மட்டும் அது செல்லாதென்றும்
சொல்லி சுமார் 3மணிநேரம் உபந்நியாசம் செய்து முடிவில்
நாளது, முதற்கொண்டு தலைவர்கள் 144-வது செக்ஷனை
மீறி நடப்பதற்கு உத்திரவு தராவிடில், தாம் அதற்கு கட்டு
ப்பட்டு நடப்பதாயும் கூறி முடித்தார். அக்கிராசனர் மௌ
ல்வி அஜீத்இப்ராஹிம்சாயபு அவர்களின் உத்திரவை மீட்
டிங்கு நடுவில் பெற்றுக்கொள்ள மறுத்து, மீட்டிங்கை நட
த்தி அது கலைந்த பிறகுதான் பெற்றுக்கொண்டார். மற்ற
மூவர்களும் பிரசங்கத்திற்கு வராததால் அவர்களுக்கு உத்
திரவு சாதா செய்யப்படவில்லை. மகாநாடு, பொதுஜன அமை
திக்குபங்கமில்லாமலும், கலகமில்லாமலும் கஷ்டமில்லாமலும்

ஸ்ரீ தெண்டபாணிபிள்ளை சட்டத்தை முதலில் மீறினர் உரு

இனிதாக நடக்கத்தெரியாததனால் அதிகாரிகள் சட்டத்தைமீறிய இக்குற்றத்திற்காக யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொண்டு கலைக்கடந்ததாக ருசுபிக்கமுடியாதென்று சட்டநிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். டெல்லி தீர்மானத்திற்குப் பிறகு தமிழ் மாகாணத்தில் சட்டத்தை மீறி நடந்தது முதன்முதலாக ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைதான்.

ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை வழக்கு

ஸ்ரீமான் என். தண்டபாணிபிள்ளையின்மீது தொடுக்கப்பட்டிருந்த ஜாமீன்வழக்கு இம்மாதம் 2-ந்தேதியில் தஞ்சாவூர் அடிஷனல்ஜில்லா மாஜிஸ்ட்டிரேட்டின்முன்னிலையில் ஆரம்பமாயிற்று. அரசாங்கத்தரப்பில் 4-சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். வழக்கு மறுபடியும் மறுநாளைக்குத் தள்ளிப்போடப்பட்டது. ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை கோர்ட்டைவிட்டு வெளியில்வந்ததும் மாயவரம்தாலுக்காவில் பேசக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தும் அக்கட்டளையை மீறி பேசியதற்காக கைது செய்யப்பட்டு தஞ்சாவூர் இரண்டாம்வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்முன்னிலையில் நிறுத்தப்பட்டார். மாஜிஸ்ட்டிரேட் இவரை சப்ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்.

மறுபடியும் 3-ந்தேதியில் வழக்கு தஞ்சாவூர் அடிஷனல்மாஜிஸ்ட்டிரேட்முன்னிலையில் ஆரம்பமாயிற்று. அரசாங்கதரப்பில் எட்டுசாட்சிகளின் வாக்குமூலங்கள் முடிவடைந்தபின்னர் கோர்ட்டார் ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளையைப்பார்த்து ஏதாவது சொல்வதாயிருந்தால் சொல்லலாம் என்றுகூறினார். அப்போது அவர்கூறியதன் சாராம்சம் வருமாறு:—

௨௯. ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை வழக்கு

"நான் பேசியதின் மொழிபெயர்ப்பு சரியாயில்லை. என்னுடைய பிரசங்கத்தின்பயனாய் நேரிடாத சம்பவங்களும் என்பிரசங்கத்தின்காரணமாய் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒரு வாக்குமூலத்தை ஆஜர்படுத்துகிறேன்"

பின்னர் அவர் கீழ்வரும் வாக்குமூலத்தைக்கொடுத்தார்,

"நான் ஓர் ஒத்துழையாக்காரன் ஆவேன். என்னுடைய பிரதிக்ஞை பலாத்காரமற்ற செயல்களைச்செய்வதும் தற்போதைய இந்திய ஆட்சிமுறையைத் திருத்துவதற்காகப்பாடுபடுவது; அல்லது அதைமாற்றிவிடுவதற்காகப் பாடுபடுவதுமாகும். ஆகையால் என்மீது 124. ஏ. செக்ஷன்படிநடவடிக்கைகள் நடத்துவது சுலபமானகாரியமாகும். நான் பலாத்காரத்தைச்செய்யும்படியாய்த் தூண்டினேனென்று அரசாங்கத்தார் ருஜுப்பிக்காமல் என்மீது குற்றஞ்சாட்டுவது அவர்கள்கொடுத்த வாக்குறுதியினின்றும் தவறியதாகும். நான் காங்கிரஸ்வேலையை நிறுத்திவிடமாட்டேன். சிறைவாசத்தை அநுபவிக்கவும் சித்தமாயிருக்கிறேன். என்மீது 153-ஏ. செக்ஷன்படி குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதை நான்முற்றிலும் மறுக்கிறேன். ஜாதிச்சண்டைகளைஉண்டாக்குவது என் விருப்பமல்ல, நான் காங்கிரஸ்காரனும் ஒத்துழையாக்காரனும் ஆவேன். ஆகையால் என்னுடைய முதற்கடமை ஆங்கிலேயர் உள்ளிட்ட எல்லாஜாதியர்களுக்கும் பரஸ்பர நேச பாவத்தையுண்டாக்குவதேயாகும்"

6-ந்தேதியில் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைக்கு ஒருவருடக் கடுங்காவல் தண்டனைவிதித்தார்.

ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை மனைவியின் பிரசங்கம். ௨௭

மாயவரம், டிஸம்பர் 9—

சென்ற 7-ந்தேதி மாலை ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளை 144-வது செக்ஷனை மீறியதாய்க் கொண்டுவந்த வழக்கில் 4—மாதம் கடுங்காவல்தண்டனை மாயவரம் மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்டதை முன்னிட்டு, காவேரியில் ஒரு பெரியமகாநாடு கூடிற்று. கார்குடி ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையின் தர்மபத்தினி ஸ்ரீமதி கமலாம்பாள் முதலில் பேசினதின் ஸாரமாவது. "என் கணவருக்கு தஞ்சைகோர்ட்டாரால் ஒருவருஷக்கடுங்காவல்தண்டனையும், மாயவரம் கோர்ட்டாரால் 4-மாதம் கடுங்காவல் தண்டனையும், விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எனக்குயாதொரு வருத்தமுமில்லை, ஆனால் அவர் என்ன குற்றம் செய்தாரென்பது தான் கேள்வி. தன்னாட்டிலுள்ளவர்கள் குடிக்காமலும், ஒற்றுமை இன்மையால் கோர்ட்டுக்குச்சென்று பணத்தை விரயஞ்செய்யாமலும், தன்னாட்டிலுள்ளவர்கள் எல்லாரும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்றும், என் கணவர் உங்களுக்குச்சொன்னார். சுருக்கக்கூறின் தேசபக்தி என்ற குற்றத்தைதவிர வேறு ஒருகுற்றத்தையும் அவர் செய்யவில்லை. என் கணவர் சிறைக்குச் சென்றதைப்பற்றி நான் வருத்தப்படாவிடினும், அநீதிமுறைதடுமாறி தீர்ப்பதற்கு நான் வருத்தப்படாமலிருக்கமுடியவில்லை. தமிழ்நாட்டில் தேசத்தொண்டுசெய்துவந்த என் நாயகனை ஒருகொள்ளைக் கூட்டத்தானைப்போல நடத்துகிறார்கள். ஏன் அவர்கள் இவர்களிடத்தில் பயப்படவேண்டும்? மஹாத்மாவின் அஹிம்ஸா தர்மத்தை அவலம்பித்து பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு உபதேசஞ்செய்ததேதவிர வேறு ஒருகுற்றமும் செய்யவில்லை என்பதைமீண்டும் உங்களுக்குத்தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் கணவர் எனக்காக வைத்துவிட்டுச்

உ.அ ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை மனைவியின் பிரசங்கம்.

சென்ற தேசத்தொண்டை இன்றுமுதல் என் சகோதர சகோதரிகளின் மத்தியில் செய்ய ஆரம்பித்துவிட்டேன். என் கணவர் விடுதலையடைவதற்கு காலதாமதம் ஏற்படுமானால் அக்குற்றம் உங்களுடையதேயாகும், அவர் சொன்னபடி நீங்கள் நடந்தால் இந்தமாதத்திற்குள் என் கணவர் விடுதலை அடைவதோடு, நம் தாய்நாடும் விடுதலையடைந்துவிடும். எனது 1-வயதுக் குழந்தையோடு இல்லறவாழ்க்கையை சந்தோஷத்தோடு நடத்தி, அடிக்கடி உங்கள் மத்தியில் தேசியத்தொண்டு செய்யவும் தயாராயிருக்கின்றேன்" என்று சொல்லி முடித்தார். பிறகு தஞ்சை ஸ்ரீமான்கள் வெங்கடகிருஷ்ணபிள்ளை, முத்துகிருஷ்ணநாயுடு, சுப்பிரமணிய அய்யர், மகம்மது இப்ராஹிம் சாஹிப், முதலிய பிரசாரகர்கள் தற்கால நிலைமை, சுயதேசியம், மதுவிலக்கு முதலியவைகளைப் பற்றி உபந்நியாசம் செய்தனர்

(சுதேசமித்திரன்.)

கும்பகோணம் டிசம்பர் 10:—

நேற்றுமாலை தோணித்துறைக்குக் கிழ்புறமாக காவிரியாற்றின் மணல்வெளியில் 5000 பேர்கள் ஸ்திரீகளும் பெரியோர்களும் நிறைந்த மஹாநாடு கூடியது. பந்தநல்லூர் ஸ்ரீமான் சிவகுருநாதபிள்ளை, அக்கிராசனம் வகித்தார். ஜெயில்வாசத்திலிருந்து வந்த ஸ்ரீமான் சுப்பையாபிள்ளை தேசீயகீதம் பாடினார். அக்கிராசனர் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை மகாஜனங்களுக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும், தவச்சாலைக்கேகினதை உருக்கமாகச் சொல்லி அவர் தேவியாரான ஸ்ரீமதி கமலாம்பாளை சபையார்களுக்கு அறிமுகமும் செய்வித்தார். ஸ்ரீமதி கமலாம்பாள் பேசினதாவது, என்னுடைய கணவர் சுதந்திர தவச்சாலையில் புகுந்திருக்கிறார் என்று நீங்கள் மனங்கலங்கி வருந்திடாமல் அவர் கொண்ட தேசத்தொண்டையே நீங்களும் ஒற்றுமையுடன்

னைக்கொண்டு தியாகம் செய்ய முன் வரவேண்டும். அவர் சிறைச்சாலைசென்றதுபற்றி நான் மிகவும் சந்தோஷிக்கின்றேன். எத்தனைவருஷம் அவர் ஜெயிலில்வைக்கப்பட்டாலும் அதை அவர் ஓர் ஆசியாகவேகருதுகின்றார். அவர் ஜெயிலில் உங்களுக்காகவே போயிருக்கின்றார். அதற்கு நீங்களே ஜவாப்தாரியாவீர்கள். நீங்கள் ஒத்துழைமப்பட்டு தியாகம் செய்து, பாரததேசம் விடுதலை யடைய பாடுபடாத காரணத்தினால் தான் சிறைபுகுந்தார். உங்கள் தியாகத்தினாலேயே அவர் விடுதலைபெறவேண்டும். உங்கள் தியாகம் என்ன? ஒரு மனப்பட்டு கதர்உடையை உடுத்தவேண்டும். எல்லோரும் சுதேசியத்துணியைக் கட்டிக் கொண்டிராததினால் அல்லவோ அவர்ஜெயிலுக்குப்போக நேரிட்டது. இப்பொழுது அவர் வீட்டில் தானிருக்கிறார். நீங்கள் தான் ஜெயிலில் விடுதலையற்று இருக்கிறீர்கள். (கேளுங்கள் கேளுங்கள்.) உங்கள் ஒத்துழைமைக்குறைதலைக் கண்டே நாமெங்களவர் ஜெயிலுக்குப்போக நேரிட்டது. இனி இச்சர்க்காரின் அக்கிரமமுறைகளையும், அவைகளையும் பேசத்தீர்மானித்து முன்வந்திருக்கிறேன். குடியை நீர்த்தாங்கள் அரசாங்கத்தின் அக்கிரம முறைகளை ஒழித்து வியாபார வைசியதந்திர ஆட்சியை நிலை நிறுத்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் முன்வந்து தியாகம்செய்யாவிட்டால் நம்தேசம் க்ஷேமம் அடையாது என்று பேசிமுடித்தார். (வந்தேமாதரம் என்னும் கரகோஷமும்.) ஸ்ரீமான் பவானிசிங்கின் தாயார் ஸ்ரீமதி ரூபாபாய் மேற்படியாருக்கு மாலை சூட்டினார். ஸ்ரீமான் பவானிசிங் தாயாருக்கும் மாலை சூட்டப்பட்டது. பிறகு ஸ்ரீமான் வெங்கடகிருஷ்ணப்பிள்ளை ராஜீய நிலைமையையும், கதர் உடையையும் பற்றி ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசினார். ஸ்ரீமான்கள் பங்காரு வெங்கடராமையர் ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை செய்து வந்த இன்றியமையாத தேச ஊழியத்தைப்பாராட்டிப்பேசினார். (சுதேசமித்திரன்.)

௨௧ ஸ்ரீமான் தெண்டபாணிபிள்ளை மனைவியின்பிரசங்கம்

சிதம்பரம்.

துன்மதி௵ கார்த்திகைமீ 28௳ சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவில்கீழ் கோபுரவாசலில் ஆனித்தெரிசனத்தன்று மாலை தைதூர் தேசியமகாசபையின் ஆதரவில் சீர்காழி தேசியமகா சபையின் காரியதரிசி ஸ்ரீமான் சொ. சாமிநாதசெட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் சீர்காழி ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் தேசியகீதம் பாடியபின் ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மான் செய்தபிரசங்கம் பின்வருமாறு.

வந்தேமாதரம்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

சென்றஆனித்தரிசனத்தன்று எனது கணவர் இவ்விடத்தில் பிரசங்கம் செய்தவர் இப்போது சென்னைப்பட்டணம் ஜெயி லில் இருக்கிறார். அந்தபாக்கியம் பெறும் பேற்றை நான் பெற்றதற்கு நான் பெருமையும் சந்தோஷமுமடைகிறேன். ஆண்மக்கள் நிறைந்த பெருங்கூட்டத்திலே ஒரு பெண்ணு ளிய நான் உங்கள் முன்னிலையில் சிறிதும் முன்பின் யோசனையில்லாமல் பேசவந்தது எதற்காக என்றால் நமது பாரத தேசம் இப்போது என்ன நிலைமையில் இருக்கின்றதென் பதை நீங்கள் எல்லோரும் யோசித்துப்பார்த்தால் நன்றாய் தெரியும். பாரதமாதாவின் விடுதலைக்காக நமதுதேசத்து சுதந் திரத்தையும் மானத்தையும் காப்பாற்றவேண்டி பாஞ்சால தேசத்திலே எங்களைப்போன்ற பெண்கள் மானபங்கப்படுத் தப்பட்டும் கற்பு அழிக்கப்பட்டும் வெள்ளைப்பட்டாளப்பல விதமான அவமானங்களுக்கு உட்பட்டும் கஷ்டப்பட்டார் கள் என்பதை உணர்ந்த தேசியத்தலைவர்கள் எல்லாம் கூ நமதுசகோதரசகோதரிகள் மானமிழப்பதை பொறுக்கா மல் மானமிழந்து வாழ்வதிலும் உயிர்விடுவதே மேல் என்று லான், தாஸ், மகாத்மாகாந்தி, நேரு, லஜபதிராய், வாசுதேவமுத லியதேசத்தலைவர்கள் எல்லாம் இச்சமயம் இருக்கும் ஜெயில்

நான் நமக்கு விடுதலை செய்யக்கூடிய தவச்சாலை யெனக்கருதி அவர்கள் சென்றிருக்கும் இடத்திற்கே என்கணவரும் சென்றிருக்கிறார். அவர் திருச்சி ஜெயிலுக்கு போகும் போதும் கூடவே போய்வழி அனுப்பினேன். சென்னை ஜெயிலுக்கும் வழி அனுப்பினேன், அவர் சந்தோஷத்தோடும் வீரத்தோடும் உறுதியுடனும் இருக்கின்றார். நானும் என் குழந்தையுடன் அவரை பின்பற்றுவேன். என் கணவர்செய்த குற்றம் என்ன! திருடினாரா, கொள்ளைசெய்தாரா, பொதுஜனங்களுக்கு கள்ளைகுடிக்கவேண்டாமென்று சொன்னதும் கைராட்டினங்களை சுற்றி கதர் ஆடைகட்டவேண்டுமென்று சொன்னதே தவிர வேறொன்றுமில்லை. இதற்காகத்தான் ஒரு வருடத்திற்கு நன்னடக்கை ஜாமீன் கேட்டார்கள். தான்செய்வது நியாயமான காரியமானதால்தன் மனச்சாக்ஷிப்படி ஜாமீன் கொடுக்கமறுத்து சந்தோஷமாய் சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறார். தமிழ்மாகாணத்திலே முதல் முதல் மகாத்மா சொல்படி சட்டத்தை மீறினார். அதற்கும் ௪-மாத தண்டனை பெற்று அயோக்ய அரசாங்கத்திலே யோக்கியர்களுக்கு இருப்பிடம் ஜெயிலைக்கருதி சென்றிருக்கிறார். ஆகையால் அவர் எக்காரியத்தில் ஈடுபட்டாரோ, அப்படியேஎன் சகோதர சகோதரிகள் எல்லாரும் காந்தியின் ஆணைப்படி சிறைக்குசென்று நம் நாட்டு சுதந்திரமடையப் பாடுபடவும். ஒவ்வொருகிராமத்திலும் கள் குடி ஒழிந்து கள்ளுக்கடைகள் ஒழியவேண்டும், கதர் துணியையேகட்டவேண்டும். சீமைத் துணியை நெருப்புப்போட்டு கொளுத்தவும் கைராட்டினங்களை சுற்றவும்வேண்டும். மற்ற விஷயங்கள் பின்பேசும் என் சகோதரர்கள் சொல்லுவார்கள் இத்தோடு என் உபந்யாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன். பிறகு திருப்பூர் தேசிய சபையின் காரியதரிசி ஸ்ரீமான் ஸுப்பையப்பிள்ளை ஒரு நிமிஷம் பேசி அன்னியதுணிகள் தீக்கிரையானபின்னர் கூட்டம் இனிது கலைந்தது. (வர்த்தமானம்)

சிறைவாசம்.

ஸ்ரீமான் பிள்ளையவர்கள் முதலில் திருச்சிசெண்ட்ரல் ஜெயிலுக்கு 10-12-22-ல் கொண்டு போகப்பட்டு ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யா, ஜெப்பாகட் ஹாலன் முதலிய சிறந்த தேசபக்தர்களுடன் தாமும சிறை வாசமாகிய தவ வாசமிருந்து வருகையில் இடையொன்று 1922ஆம் ஜனவரியின் கடைசியில் சென்னை (Penitentiary) ஜெயிலுக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்து மீண்டும் அரசாங்கத்தார் சௌகரியக்குறைவின் பேரில் தென்னூர் காடுதில்லை ஜெயிலுக்கு மாற்றத் தீர்மானித்தபடி ஸ்ரீமான் பிள்ளையும் கிரிமூஸ்லா சத்தியாகிரகியாளவும் சென்னை டெபுடேசனாய்க்கரும், கொண்டுபோகப் பட்டார்கள். இன்றைய் கழித்து ஸ்ரீமான்கள் டாக்டர் நாயுடு, சாஸ்திரி முதலிய தமிழ்நாட்டு தேசபக்தர்களும், தேசபந்து வெங்கட்டப்பய்யா, டாக்டர் சுப்பிரமணியம், முதலிய ஆந்திர தேசபக்தர்களும், அவ்விடம் கொண்டுவரப்பட்டு தற்சமயம் மூன்றதற்கு மேலான தேசபக்தர்கள் இருந்து வருகின்றனர் அவர்களுக்கிடையே முக்கியமாக ஸ்ரீமான் நாயுடுவும் தெண்டபாணிப்பிள்ளையும், தங்களுடைய சிறைவேலைகளை செய்து எஞ்சிய நேரங்களில் எவ்வளவு குதூகலத்துடனும் ஊக்கத்துடனும் தேசியச்சுடரை வளர்த்து வருகின்றனரென்பது. சிறையினின்றும் சமீபத்தில் வெளிவந்த ஸ்ரீமான் சாமிநாதன், கோபாலன முதலியோர் வாக்கு மூலங்களினும் நன்கு தெரியவரும்.

தன்னலம் சிறிதும் கருதாது பொது நலத்தையே பேணி ஒழுகும் பிள்ளையவர்களுக்குச் சிறைவாசம் ஒருபொருட்டல்ல. இன்னுமோர் ஆறுமாதங்களில் அவர் மீண்டும் வெளிவந்து விடுவார். ஆனால் அவர் வெளிவந்தாலும் நாம் முன்னிலும் ஊக்கக்குறைவுற்றிருப்பதைக் கண்டு அவருடைய அவர் மனம் எவ்வாறு புண்படும். அதற்கு நாம் செய்ய வேண்டிய தக்கமாது யாதெனில் நமது தலைவர்கள் எவ்வழியை பின்பற்றி வந்தார்களோ! எதற்காக சிறைக்குச் சென்றார்களோ! அவ்வழியை நாமும் பின்பற்றி அதனை அனிர்த்தும் குடியாயுமதின் ... தேசபக்தியை வளர்த்து வருவதுதான் நாம் செய்யும் கைம்மாறாகும்!

Swadharma. 4—12—21. E. L. Iyer. Bar at law.

MR. R. DANDAPANI PILLAI moved the resoulution for a grant of Rs 15.000 for the mill hands who have not been re-entertained. The resolu tion was ably supported by Messrs. Chakkarai Chettiar, Singaravalu Chettiar and Subramania Iyer. There was, we are sorry to note opposition by some and evasion by some at the helm. But the stirring and noble speech of Mr. T. V. Kalyanasundara Mudaliar raised the question from the plane of party bickerings to a humaner level, and the audience deeply moved, voted the money by an overwhelming majority. The Tamil Provincial Congress committee should be congratulated on its unequivocal decision. Among those thrown out of employment are Adi Dravidas, Dravidas, and Musalmans

---

SWARAJYA Dated 15th Dec. 1921.

VINDICTIVENESS

By C. RAJAGOPALACHAR

Mr. Dandapani Pillay the well known congress worker has been sentenced by the sub-magistrate of Mayavaram to four months rigorous imprisonment for disobeying an order not to address a temparance meeting. The Magistrate has directed that his sentence should not begin to work itself out at once, but should take effect from the date of expiry of another so called "sentence" given by the Additional District Magistrate of Tanjore. This last is an order committing Mr Dandapani to prison for a year's rigorous

imprisonment for not giving security in terms of Sec 108 Cr. P. C. Points of law interest very few people these days. However we may point out in passing that bad laws and politics have missed the Sub-Magistrate to a serious error of law. We leave him and his judgment in this respect to the care of those above him in the judiciary, and pass on to matters of common sense and fairplay. Mr Dandapani did not partake in either of the trials except to make his own statement. The word of a Non-Cooperator who makes a statement before walking cheerfully into jail is to us worth tons of evidence Mr Dandapani said before the Mayavaram Magistrate:

"The order was indecently served on me when I was on the platform and had begun speaking. though at that time the P C. C. had not sanctioned disobedience of such an order, I decided to disobey it and continued the meeting and finished my speech lest there should be an unseemly disturbance that might lead up to petty violence, in consequence of the Sub-Inspectors unprecedented action in coming in the middle of a meeting with such an order.

It is impossible to understand the mentality of a judicial officer who sentences the accused in such a case to any thing more than a nominal punishment Yet we find that politics has so upset the Magistrate that he has awarded four months hard labour for it, and lest his authority be lost in that of the Additional District Magistrate has orderel his four months to begin after the expiry

of the latter's sentence. The fact is that if political use is made of courts, the true character of courts the true character of proceedings must necessarily be lost sight of, and justice must get divorced from law.

SWARAJYA, DECEMBER, 25, 1921.

CHIDAMBARAM.

23—12—21.

WIFE CONTINUTES HUSBAND'S WORK.

Srimathi Kamalambal Ammal. (Mrs. C. N. Dandoapani Pillai), has sent the following letter to Mahatma Gandhiji. "My. husband. C. N. Dandapani Pillai of Chidambaram (S. Arcot Dt.) had been fortunate enough to work for the motherland for the past 5 years continously till the 2nd of December 1921 when he has been remanded and finaly sentenced on the 6th December to one year's rigorous imprisonment under the security sections, i. e. 107 and 108. Cr. P, C. He h as also been accorded another four months' rigorous imprisonment for disobeying Sec. 144. and he was the first to do so in the Tamil province. As the sub editor of Desabhakthan, a Tamil daily he was working for a few years and when the security of the press was forfeited he got a license for the same in the name of 'Gandhi press' and continued publishing. For this he was fined Rs. 100. by the Madras High Court some three years back. Ever since he was an ardent advocote of the cause of mother land and especially for the Tamil section of our brothren. You may also remember that he had the supreme fortune of addressing the public and labourers under your presidency when he was at the head of the labour Union at Madras and

also during your recent visit at Kumbakonam. & Tanjore.

By the Grace of the Almighty I am glad to inform you that I have taken up his propaganda work ever since my husband entered the gaol (Yogasala) and hope to see my son a child 12 months old, (who has now escaped from the violence of the Government) should grow into the true son of his father soon. I am earnestly praying unto Sri Nataraja (Chidambaram Mahadev) for the sucess of our National Congress. at Ahamadabad.

[Sd] Kamalambal Ammal. (Mrs. N. Dandapani pillay.)

"SWARAJYA" Dated 30--3--22.

ILLEGAL SENTENCES

Mr. N. Dandapani pillay's case, to which we drew attention some time ago is not the only one in which the Magistrate has passed an illegal order. It directs that the sentence passed by him shoud begin after the expiry of the period of committal to prison (ordered by another court) for failure to furnish security. In many other cases since Mr. Dandapani's trial, we see that similar illegal orders have been passed contrary to the High Court's clear ruling that a substantive conviction and sentence passed for an offence under the Penal Code cannot be postponed to take effect after expiry of a term of imprisonment ordered under the security chapter of the Procedure Code. The latter is not a sentence, but only a committal to prison, and the terms should run concurrently, However, as the cases of Non-co-operators are not taken to the High Court, it may not be bound soo more to see that justice is rendered in such cases.

(Sd)C. RajagopalaChar.
General Secretay. A. I. C. C.

இச்சரித்திர புஸ்தகம் கிடைக்குமிடங்கள்.

ஸ்ரீ திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்கள்,
"நவசக்தி" பத்திராதிபர்.
ராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ டாக்டர். பி. வரதராஜுலுநாயுடுகாரு அவர்கள்.
"தமிழ்நாடு" பத்திராதிபர், சேலம்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.
மானேஜர், மில்ரோடு, கோயம்புத்தூர்.

ஸ்ரீ எம். எஸ். விஸ்வலிங்கம்பிள்ளை அவர்கள்.
S. I. Ry. ரிடையர்ட் ஸ்டேஷன்மாஸ்டர்.
மடத்தெரு, மேலக்காவேரி, கும்பகோணம்.

ஸ்ரீ எஸ். பொன்னுசாமிமுதலியார் அவர்கள்.
[illegible] கடலூர்.

ஸ்ரீ டாக்டர் எஸ். நடராஜன் அவர்கள்.
ஸ்ரீ நடராஜா டிஸ்பென்சரி, மேலசன்னிதி, சிதம்பரம்.

ஸ்ரீ நா. கணபதியாப்பிள்ளை, காரியதரிசி,
ஸ்ரீ தண்டபாணி வாசகசாலை, 16-கால் மண்டபத்தெரு,
சிதம்பரம்.

குறிப்பு.—இப்புத்தகம் தபாலில் வேண்டுவோர் மேல் கண்ட விலாசதாரருக்கு 5-அணா ஸ்டாம்பு அனுப்பி [illegible] அனுப்பப்படும்.

ந. கலியாணம், தேசீய ஸங்கீத சபை காரியதரிசி,
சிதம்பரம்.

S. S. V. PRESS C. D. M.